KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
வீட்டு மோட்கேஜ் பிரச்சினையா? சட்ட ஆலோசனை தேவையா?
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons) (வழக்கறிஞர்)

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி! குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL

மலர்:- 32, 16 மே 2025 இதழ்:- 20

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial Industrial Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvale Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED


## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! மே மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

என் இனிய உறவுகளே! அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் 423 குழந்தைகளுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்தநாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன் வாருங்கள்! தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 14வது வருடத்தில் தொடரும் சேவை. ஈழநாடு பத்திரிகையின் அறப்பணியில் நீங்களும் பங்கு கொள்ளுங்கள். விபரங்களை 10ம் 11ம் பக்கங்களில் காணலாம். தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

## கனடாவின் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராக ஹரி!

கனடாவின் புதிய அமைச்சரவையின் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராக ஹரி ஆனந்தசங்கரி பதவி பிரமாணம் செய்து கொண்டுள்ளார். அண்மையில் கனடாவில் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் மார்க் கார்னி தலைமையிலான தரப்பு வெற்றி பெற்ற நிலையில் புதிய அமைச்சரவை நியமனங்கள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கார்னி 28 அமைச்சர்களை அமைச்சரவை பதவிகளுக்கும் மேலும் 10 பேரை வெளியுறவுச் செயலாளர்களாகவும் நியமித்துள்ளார்.(3ம் பக்கம் பார்க்க)



ஈழநாடு பத்திரிகையை வாரம் தோறும்
**eelanadu.ca**
மின்னிதழ் மூலம் வாசிக்கலாம்

ஈழநாடு எதிர்பாருங்கள்! ஈழநாடு பத்திரிகையின் 32வது ஆண்டு விழா 01 யூன் 2025 ஞாயிற்றுக்கிழமை விபரங்கள் உள்ளே!

# கனடாவில் திறந்து வைக்கப்பட்டது தமிழர் இனஅழிப்பு நினைவுத் தூபி!

## தமிழர்களுக்கு இன அழிப்பு நடைபெறவில்லை என்பவர்களுக்கு கனடாவில் இடமில்லை - பிரம்டன் மேயர் பட்ரிக் பிரவுண் தெரிவிப்பு!

கனடா பிரம்டனில் தமிழர் இனவழிப்பு நினைவுத்தூபி உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டுள்ளது. இலங்கை அரசாங்கத்தின் இனப்படுகொலையை நினைவுகூரும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள தமிழர் இனவழிப்பு நினைவுத்தூபியை திறந்து வைக்கும் நிகழ்வு சிங்காவுசி பூங்காவில் இடம் பெற்றவேளை கனடா அரசியல்வாதிகள் உட்பட பெருமளவானவர் திரண்டிருந்தனர். (4ம் பக்கம் பார்க்க)





## தமிழ்க்கட்சிகளுக்குக் கிடைத்த வாக்குகள் பயனற்றுப் போன அரசியல் பாதையில் மீண்டும் செல்வதற்கான அங்கீகாரம் அல்ல - விபரம் உள்ளே

THINKING OF

# SELLING OR BUYING A HOME?

www.AgentSiva.com

*Your neighborhood sales representative*



**PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!**

RE/MAX REALTRON Realty Inc. Brokerage

Home of the Top Producers


## Siva Kandiah
Sales Representative

**Dir: 416-301-9540**

sivakandiahhome@gmail.com

## Piravien Siva
Sales Representative B.Comm.

**Dir: 647-221-5220**

piravien@gmail.com




22 Years Real Estate Experience


885 Progress Ave #209, Scarborough, ON. M1H 3G3
Independently owned and operated

**Bus: 416-289-3333**

**• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY**


### Warden/Finch


**Scarborough** $424,900
2 Beds • 1 Baths • 6 Rooms
Walking distance to school


### Kennedy / Hwy 401

**Scarborough** $429,900
1 Beds • 1 Baths • 5 Rooms
Newly Renovated Unit


### Markham / Sheppard Ave

**Scarborough** $479,000
1 Beds • 1 Baths • 3 Rooms
Corner Condo Townhouse

### McCowan / Ellesmere

**Scarborough** $599,000
2 Beds • 2 Baths • 5 Rooms
Just A Short Walk To STC


### Mccowan & Hwy 401

**Scarborough** $549,900
2 Beds • 2 Baths • 5 Rooms
Corner suite, unobstructed views


### Kennedy / 401

**Scarborough** $538,000
2 Beds • 1 Baths • 5 Rooms
Open Concept Living-Dining


### Simcoe St / 401

**Oshawa** $575,900
3+1 Beds • 2 Baths • 5+1 Rooms
Newly Painted, 1100+ Sqft


### Grandview Dr. / Bloor

**Oshawa** $649,800
2+2 Beds • 2 Baths • 7+4 Rooms
Upgraded floor, Newly renovated

### 9TH LINE / HIGHWAY 7

**Markham** $1,100,000
4 Beds • 4 Baths • 9 Rooms
luxury freehold townhouse

### Dixie/ Glenanna

**Pickering** $799,000
3 Beds • 2 Baths • 6 Rooms
Great area close to all amenities

### Audley Rd & Rossland Rd E

**Ajax** $799,000
3 Beds • 3 Baths • 8+3 Rooms
No maintenance fees Townhouse


### Markham & Ellesmere

**Scarborough** $1,050,000
3+1 Beds • 2 Baths • 6 Rooms
Fin.basement with sep.entrance


### Morningside/Mcnicol

**Scarborough** $1,099,900
3 Beds • 3 Baths • 7+2 Rooms
Hardwood flooring throughout

### 401/Morningside

**Scarborough** $1,249,000
4+2 Beds • 4 Baths • 12 Rooms
Easy access to the new 407

### 10th Line/ Hoover Park Dr

**Stouffville** $1,499,999
4+1 Beds • 4 Baths • 10 Rooms
3,162 Sqft ,Upgrades Designed

### 9th Line/Hoover Park

**Stouffville** $999,000
4 Beds • 3 Baths • 8 Rooms
Modern Living Elegant Upgrades

**EELANADU**
203 Gardiner Dr
Bradford - ON
L3Z 0J5 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

### வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**


**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# கனடாவின் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராக ஹரி!



கனடாவின் புதிய அமைச்சரவையின் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராக ஹரி ஆனந்தசங்கரி பதவி பிரமாணம் செய்து கொண்டுள்ளார். அண்மையில் கனடா வில் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் மார்க் கார்னி தலை மையிலான தரப்பு வெற்றி பெற்ற நிலையில் புதிய அமைச்சரவை நியமனங்கள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கார்னி 28 அமைச்சர்களை அமைச்சரவை பதவிகளுக்கும் மேலும் 10 பேரை வெளியுறவுச் செயலாளர்களாகவும் நியமித் துள்ளார். பொதுபாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்பட்ட ஹரி ஆனந்தசங்கரி முன்னதாக பல அமைச்சரவை அமைச்சு பதவிகளை வகுத்துள்ளார்.

இலங்கைத் தமிழரான ஹரி ஆனந்தசங்கரி கடந்த 2015 ஒக்டோபர் 19 இல் நடைபெற்ற கனேடிய பொதுத் தேர்தலில் லிபரல் கட்சியின் சார்பில் இசுக்கார்பரோ–ரூச் பார்க் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்று முதற்தடவை யாக பாராளுமன்றம் சென்றார். முன்னதாக சுதேச உறவுகளு க்கான அமைச்சராகவும் 2025 மார்ச் 14 முதல் நீதி அமைச்ச ராகவும் கனடிய சட்டமா அதிபராகவும் பணியாற்றி வருகிறார்.

கனடாவில் தமிழ் இளைஞர்கள் மத்தியில் ஏற்படும் வன்முறைகளை தீர்த்து வைக்கும் வகையில் கனடாவில் இளைஞர்கள்சேவை நிலையமொன்றை அவர் ஆரம்பித்து ள்ளார். மேலும் கனேடிய தமிழ்க் காங்கிரஸ் அமைப்பின் வளர்ச்சிக்காகவும் அவர் முன்னின்று செயற்பட்டுள்ளார்.

கனடாவின் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டபின்னர் ஊடகங்களுக்கு ஹரி ஆனந்தசங்கரி தெரிவிக்கையில் கனடாவின் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டதை நான் பெருமையுடனும் பணிவுடனும் ஏற்றுக்கொள்கின்றேன்.

டேவிட் மப்பின்டியின் சிறந்த பணியை அடித்தளமாகக் கொண்டு மேலும் கட்டியெழுப்ப ஆர்வமாகவுள்ள அதே வேளை எமது சமூகங்களைப் பாதுகாப்பாக வைத்திருப்ப தற்கும் வெறுப்புணர்வுக் குற்றங்களுக்கு எதிராகப் போராடு வதற்கும் கனேடியர்களை நாளாந்தம் பாதுகாப்பும் முகாமை அமைப்புக்களை பலப்படுத்தவும் நான் உறுதிபூண்டுள்ளேன்.

முடியரசு பழங்குடிகள் உறவு மற்றும் நீதி அமைச்சுக்களில் ஏற்பட்ட அர்த்தமுள்ள முன்னேற்றம் குறித்து நான் உண்மையான பெருமிதங் கொண்டுள்ளேன். பழங்குடிப் பங்காளிகளுடன் இணைந்து செயற்பட்டு பலமானதும் மதிக்கப்படுவதுமான உறவுகளைக் கட்டியெழுப்பி மீளிணக் கத்தை முன்னகர்த்தி மேம்பட்ட எதிர்காலத்திற்கான அடித் தளத்தை நாம் கட்டியெழுப்பியுள்ளோம்.

இந்தப் புதிய பணியை நான் பொறுப்பேற்கும் இந்த வேளை யில் பிரதம மந்திரி மார்க் கார்ணி என்னில் கொண்டுள்ள நம்பிக்கைக்கு நான் நன்றியுடையவனாக இருக்கின்றேன்.

கனடாவை ஒன்றுபடுத்துவதற்கும் பாதுகாப்பைக் கட்டுறு திப்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் கட்டியெழுப்பவும் எனது அமைச்சரவைச் சகாக்களுடனும் அனைத்து மட்ட அரசுகளுடனும் இணைந்து பணியாற்ற நான் தயாராக விருக்கின்றேன் எனத் தெரிவித்துள்ளார்.

# 99 வீத சொத்தை மக்களுக்கு வழங்கும் பில்கேட்ஸ்! ஏழைக் குழந்தைகளைக் கொல்லும் எலான்மாஸ்க்!






அடுத்த 20 ஆண்டுகளில் தன்னுடைய சொத்தில் 99 சத வீத த்தை பொதுமக்களுக்கு வழங்கும் என்றும் 2045ஆம் ஆண்டிற்குள் கேட்ஸ் அறக்கட்டளை அதன் செயல் பாட்டை நிறுத்தி விடும் எனவும் மைக்ரோசாப்ட் ஃபவுண்டர் பில்கேட்ஸ் அறிவித்துள்ளார். அத்தோடு ஏழை குழந்தைகளைக் கொன்று வருவதாக கூறி எலான் மஸ்க் மீது குற்றம் சாட்டியுள்ளார். ஃபைனான்சியல் டைம்ஸ் உடன் ஒரு நேர்காணலில் கலந்து கொண்ட பில்கேட்ஸ்,

உலகம் முழுவதும் உதவிகளை வழங்கி வரும் ஏஜென்சி யான US ஏஜென்சி ஃபார் இன்டர்நேஷனல் டெவலப் மெண்டிற்கு வழங்கி வந்த உதவியை எலான் மஸ்க் சமீபத்தில் நிறுத்தியதை விமர்சித்துப் பேசினார்.

இதன் விளைவாக மீசில்ஸ், HIV மற்றும் போலியோ போன்ற நோய்கள் மீண்டும் அதிக அளவில் ஏற்படுவதற்கு எலான் மஸ்க் காரணமாக இருக்கப் போவதாகவும் அவர் குற்றம் சாட்டினார். இந்த உலகிலேயே மிகப்பெரிய பணக்காரர், இந்த உலகத்திலேயே ஏழ்மை நிலையில் உள்ள குழந்தை களை கொல்வது என்பது நல்ல விஷயம் கிடையாது என்று கேட்ஸ் கூறியுள்ளார்.

எலான் மஸ்க் US ஏஜென்சி ஃபார் இன்டர்நேஷனல் டெவலப்மெண்டிற்கு வழங்கி வந்த பணத்தை நிறுத்தியதன் விளைவாக தற்போது HIVயால் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகளை அவர் நேரில் சென்று சந்திக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன் என்றும் கூறியுள்ளார். மேலும் மீதம் இருக்கக்கூடிய தன்னுடைய சொத்தை அடுத்த 20 வருடங்களில் லாப நோக்கம் இல்லாத அறக்கட்டளைகளு க்கு கொடுக்க இருப்பதாகவும் பில்கேட்ஸ் அறிவித்து ள்ளார்.

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**


# கனடாவில் திறந்து வைக்கப்பட்டது தமிழர் இனஅழிப்பு நினைவுத் தூபி! தமிழர்களுக்கு இன அழிப்பு நடைபெறவில்லை என்பவர்களுக்கு கனடாவில் இடமில்லை - பிரம்டன் மேயர் பட்ரிக் பிரவுண் தெரிவிப்பு!





கனடா பிரம்டனில் தமிழர் இனவழிப்பு நினைவுத்தூபி உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டுள்ளது. இலங்கை அரசாங்கத்தின் இனப்படுகொலையை நினைவுகூரும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள தமிழர் இனவழிப்பு நினைவுத்தூபியை திறந்து வைக்கும் நிகழ்வு சிங்காவுசி பூங்காவில் இடம் பெற்றவேளை கனடா அரசியல்வாதிகள் உட்பட பெருமளவானவர் திரண்டிருந்தனர்.

இனப்படுகொலைக்குள்ளானவர்களை நினைவுகூரும் வகையில் அகவிளக்கேற்றுவதுடன் நினைவுத்தூபி திறப்பு விழா நிகழ்வுகள் ஆரம்பமாகின.இதன் பின்னர் கனடாவின் அரசியல்வாதிகள் உட்பட பல நாடாவை வெட்டி நினைத்தூபியை திறந்து வைத்தனர்.

அங்கு உரையாற்றிய பிரம்டன் மேயர் பட்ரிக் பிரவுண் கனடாவில் தமிழர் இனவழிப்பு நினைவுத்தூபியை நிர்மாணிப்பதில் தான் எதிர்கொண்ட சவால்கள் குறித்து நினைவுதூபி திறப்பு விழாவில் கருத்து வெளியிட்டுள்ளார். நாங்கள் தமிழர்கள் இனவழிப்பின் அளவை மறக்ககூடாது என அவர் தெரிவித்தார்.

இலங்கையில் தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்படவில்லை என தெரிவிப்பவர்களிற்கு பிரம்டனில் இடமில்லை கனடாவில் இடமில்லை கொழும்பிற்கு திரும்பிச் செல்லுங்கள் என அவர் தெரிவித்தார். ஆயிரக்கணக்கான தமிழர்கள் இலங்கை அரசாங்கத்தினால் படுகொலை செய்யப்பட்டார்கள் இலங்கை அரசாங்கம் தவறான தகவல்களை பரப்பி வருகின்றது, என தெரிவித்த பிரம்டன் மேயர் அவர்கள் உண்மைக்காகவும் நீதிக்காவும் குரல்கொடுத்த தமிழர்களை இழிவுபடுத்தவும் தாக்கவும் முயன்றனர், இது ஒரு உடல்ரீதியான இனப்படுகொலை மாத்திரமல்ல உலகின் அனைத்து பகுதிகளிலும் உள்ள தமிழர்கள் மீதான தாக்குதல் என தெரிவித்தார்.

தமிழர் படுகொலை நினைவுதூபி என நகரத்தில் உருவாகியுள்ளமை குறித்து நான் பெருமிதம் அடைகின்றேன் ஆனால் இன்னமும் செய்யவேண்டிய பணிகள் உள்ளன என அவர் தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறிருக்க தமிழர் இனப்படுகொலை நினைவுத்தூபி, நீதிக்கும் உண்மைக்கும் தமிழர்கள் மேற்கொள்ளும் தொடர்ச்சியான பயணத்தின் உறுதியான அடையாளமாக அமைந்துள்ளது என கனடிய தமிழர் பேரவை தெரிவித்துள்ளது. அறிக்கை ஒன்றை வெளியிட்டு கனடிய தமிழர் பேரவை இதனைத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது. பிரம்ப்டனில் தமிழர் இனப்படுகொலை நினைவுச்சின்னம் திறக்கப்பட்ட வரலாற்று நிகழ்வு (10.05.2025) இடம்பெற்றிருந்தது.

இலங்கையின் யுத்தத்தில் உயிரிழந்த பல்லாயிரக்கணக்கான தமிழீழ மக்களின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள இந்த நிலைவாலயத்தை கனடிய தமிழர் பேரவை ஆதரிக்கின்றது.

இந்த வரலாற்றுச் சம்பவத்தை சாத்தியமாக்கிய பிரம்ப்டன் நகரசபைக்கும், மேயர் பாட்ரிக் ப்ரவுன் அவர்களுக்கும், அனைத்து ஏற்பாட்டாளர்கள் மற்றும் நன்கொடைதாரர்களுக்கும் கனடிய தமிழர் பேரவை மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது என தெரிவித்துள்ளது.


கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**
Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre
309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5
Tel: 416.439.0224, Cell: 416.450.5011
Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com




# தமிழனப் படுகொலை நினைவுத்தூபி திறப்பு எங்கள் கூட்டு வரலாற்றில் முக்கியமான திருப்பம்!



கனடா பிரம்டனில் தமிழர் இனப்படுகொலை நினைவுத்தூபி திறக்கப்பட்டுள்ளமை எங்கள் கூட்டு வரலாற்றில் முக்கியமான ஒரு தருண மாகும் என கனடாவின் நீதியமைச்சர் ஹரி ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது –

இந்த நினைவுத்தூபி இலங்கையில் அரசாங்கத் தினால் தமிழர்களிற்கு எதிரான இனப்படுகொலை யின் போது கொல்லப்பட்ட ஆயிரக்கணக்கான தமிழர்களின் நினைவுச் சின்னமாக விளங்கு கின்றது.

உலகெங்கிலும் உள்ள தமிழர்களின் வலிமை மற்றும் மீள் எழுச்சி தன்மையை இது கௌரவிக்கின்றது. அவர்களின் அர்ப்பணிப்பே இந்த நினைவுத்தூபி உருவாகுவதற்கான கார ணம்.

நான் கனடா பிரம்டன் மேயர் பட்ரிக் பிரவுன் .கனடா தமிழர் தேசிய பேரவை பிரம்டன் தமிழ் சங்கம் ஆகிய தரப்பினருக்கும் எங்கள் கதைகள் ஒருபோதும் மறக்கப்படாமலிருப்பதற்காக போராடியவர்களிற்கும் எனது நன்றியை தெரி வித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

நாங்கள் தொடர்ந்தும் நீதிக்காக குரல்கொடுக்கும் அதேவேளை ஐக்கியப்பட்டவர்களாக வலிமை யானவர்களாக விளங்குவோம்.

# நாம் அநீதியை எதிர்கொள்ளும் போது மௌனமாக இருக்கக் கூடாது- யுவனிட்டா

கனடாவின் பிரம்டனில் திறந்து வைக்கப்பட்ட தமிழர் இனப்படுகொலை நினைவுச்சின்னம் எதிர்கால சந்ததியினர் கற்றுக் கொள்வதற்கான சிந்திப்பதற்கான இடமாக மாறும் என்பது எனது நம்பிக்கை.என தெரிவித்துள்ளகனடா நாடாளுமன்ற உறுப்பினர் யுவனிட்டா நாதன் நாம் அநீதியை எதிர்கொள்ளும் ஒருபோதும் மௌனமாக இருக்ககூடாது என்பதற் கான உண்மையான நினைவூட்டல் என தெரிவித் துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

அர்த்தபூர்வமானதாக அமைந்தது. தமிழர் இனப்படு கொலை நினைவுத்தூபியை திறக்கும் நிகழ்வில் நான் எனது சமூகத்தவருடன் இணைந்து கொண் டேன்.

கனடிய தமிழர் தேசிய அவைக்கும் பிரம்டன் தமிழ் சங்கத்திற்கும் மேயர் பட்ரிக் பிரவுனிற்கும் நகரத்தின் கவுன்சிலர்களிற்கும் இந்த நினைவுத்தூபியை சாத்தி யமாக்கிய சமூக அமைப்புகள் தலைவர்களிற்கும் நான் நன்றியுடையவளாக உள்ளேன்.

இந்த சக்தி வாய்ந்த இடம் தமிழர் இனப்படுகொலை யின் நீடித்த அடையாளமாக திகழ்கின்றது. இழக்கப் பட்ட உயிர்கள், துண்டாடப்பட்ட சமூகங்கள் பலர் அனுபவித்த வேதனைகளிற்கான அடையாளமாக திகழ்கின்றது. மேலும் இது தமிழ் சமூகத்தினர் மத்தியில் காணப்படும்.வலிமை மீள் எழுச்சி தன்மை நீதிக்கான தொடர்ச்சியான போராட்டத்தையும் பிரதி பலிக்கின்றது.

மே மாதம் கனடா தமிழர்களிற்கு ஒரு வேதனையான குறிப்பிடத்தக்க மாதமாகும்.உயிரிழந்தவர்களையும் தப்பியவர்களையும்.அவர்கள் அனுபவித்தவற்றின் அதிர்ச்சிகளை தொடர்ந்து சுமந்து கொண்டிருப்ப



வர்களையும் நாம் நினைவுகூரும் போது இந்த நினைவுச்சின்னம் அவர்களின் நினைவை போற்று வதற்கும் வெறுப்பிற்கு எதிராக எழுந்து நின்று மனித உரிமைகளை நிலைநிறுத்துவதற்கான கூட்டு பொறுப்பு குறித்து சிந்திப்பதற்குமான ஒரு இடத்தை வழங்குகின்றது.

புலம்பெயர்ந்த தமிழர்கள் பெருமளவில் வாழும் நாடு கனடா.அவர்களின் பங்களிப்பு கனடாவை எண்ண ற்ற வழிகளில் வளப்படுத்தியுள்ளது. இந்த நினைவுச் சின்னம் எதிர்கால சந்ததியினர் கற்றுக் கொள்வதற் கான சிந்திப்பதற்கான இடமாக மாறும் என்பது எனது நம்பிக்கை. நாம் அநீதியை எதிர்கொள்ளும் ஒருபோதும் மௌனமாக இருக்ககூடாது என்பதற் கான உண்மையான நினைவூட்டல் என அவர் தெரி வித்துள்ளார்.

# அமெரிக்கா - சீனா வரி குறைப்பு

அமெரிக்கா சீனா இடையிலான வர்த்தக போர் பதற்றத்தை குறைக்கும் நடவடிக்கையாக, இரு நாடுகளும் பரஸ்பர வரி விதிப்புகளை குறைக்க ஒப்புக்கொண்டுள்ளன.

தற்போதைக்கு 90 நாட்களுக்கு இந்த வரி குறைப்பு நடவடிக்கை அமல்படுத்தப்படும் என இருநாடுகளு க்கு வெளியிட்டுள்ள கூட்டு அறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ளது. சீனாவுக்கு விதித்த 145 மூ வரியை 30வீதமாக அமெரிக்கா குறைத்துள்ளது.

அதே போல சீனா, அமெரிக்க பொருட்களுக்கு விதி த்த 125வீத வரியை 10வீதம் ஆக குறைக்கும். சுவிட்ச்ர்லாந்தில் சீனா மற்றும் அமெரிக்கா இடையே நடைபெற்ற வர்த்தகப் பேச்சுவார்த்தையில் இந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

இரு நாடுகள் பரஸ்பரம் விதித்த வரிகளில் 115வீத வரியை புதன்கிழமை முதல் குறைக்கும் என அமெரிக்க கருவுல செயலாளர் ஸ்காட் பெசன்ட் கூறி யுள்ளார்.

இரு நாட்டு பொருளாதார மற்றும் வர்த்தக உறவு கள் குறித்து தொடர்ந்து விவாதிக்க ஒரு செயல் முறை உருவாக்கப்படும் என்றும், அதற்கு அமெரிக்க கருவுல செயலாளர் ஸ்காட் பெசன்ட் மற்றும் சீனாவின் துணை பிரதமர் ஹி லி..பாங் தலைமை தாங்குவர் என்றும் கூட்டு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இருதரப்பு பொருளாதாரம் மற்றும் வர்த்தக உறவுகள் அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் மற்றும் உலக பொருளாதாரத்துக்கும் முக்கியம் என்பதை உணர்த்துள்ளதாக அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல கட்ட பதிலடி வரி விதிப்புக்குப் பிறகு அமெ ரிக்காவும் சீனாவும் ஒரு உடன்பாட்டுக்கு ஒப்புக்கொண்டுள்ளன. தனது வர்த்தக போரின் மூலம் உலக பொருளாதாரத்தில் டிரம்ப் அதிர்வலைகளை ஏற்படுத்திய வேகத்தைக் கருத்தில் கொண்டால் இந்த 90 நாட்கள் என்பது நீண்ட காலமாகக் கருதப்படும் என்கிறார் பிபிசி வணிக செய்தியாளர் ஜோனாதன் ஜோசப்ஸ் கூறுகிறார்.

மேலும், கடந்த ஜனவரி மாதம் டிரம்ப் மீண்டும் அமெரிக்க அதிபரானதிலிருந்து அமெரிக்கா – சீனா இடையே வர்த்தக பதற்றம் அதிகரித்தது. இந்த பதற்றம் உலக பொருளாதாரத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இந்த நிலையில் இந்த உடன்பாடு, பதற்றத்தைக் குறைக்கும் ஒரு வாய்ப்பாகும்.

# இனியாவது புரிந்து கொள்ளுங்கள்

இந்தியாவின் காஷ்மீர் பகுதியில் பொது மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலைத் தொடர்ந்து இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் பதற்றம் அதிகரித்தது. குறித்த, தாக்குதலுக்கு எதிர்வினையாற்றும் வகையில் பாகிஸ்தானை தளமாகக் கொண்டு இயங்கி வரும் இஸ்லாமிய பயங்கரவாத அமைப்புகளின் இலக்குகள் மீது இந்தியா வான் வழித்தாக்குதல்களை ஆரம்பித்தது.

இதனைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடை யில் போர் பதற்றம் அதிகரித்திருக்கிறது. முழு அளவிலான யுத்தத்தை நோக்கி தாக்குதல்கள் நகராது விட்டாலும் கூட அதற்கான வாய்ப்பு காணப்படுவதாகவே தகவல்கள் கூறுகின்றன.

இவ்வாறானதொரு சூழலில், சர்வதேச நாணய நிதியம் பாகிஸ்தானின் பொருளாதார மறுசீரமை ப்புக்காக 100 கோடி அமெரிக்க டொலர்களை வழங்கும் தீர்மானத்தை உறுதிப்படுத்தியிருக்கிறது.

இந்தியாவின் எதிர்ப்புகளுக்கு மத்தியில் தான் நாணய நிதியம் இந்தத் தீர்மானத்தை எடுத்திரு க்கிறது. இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல், நாணய நிதியம் பயங்கரவாதத்தை ஆதரிக்கிறதா – இது ஒரு வெட்கக்கேடான விடயம் என்று தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டி ருக்கிறார்.

நாம் தற்போது, இந்த விடயம் தொடர்பில் குறிப் பிடுவதற்கு ஒரு பிரத்தியேக காரணம் உண்டு. அதாவது, இலங்கை வங்குரோத்து நிலையை அறிவித்ததைத் தொடர்ந்து பொருளாதார மறு சீரமைப்புக்காக நாணய நிதியத்துடன் இணைந்து செயல்படும் முடிவை எடுத்திருந்தது.

அந்த சந்தர்ப்பத்தில், தமிழ் மக்களுக்கு எதிராக இழை க்கப்பட்ட அநீதிகளுக்கு பொறுப்புக்கூறாத இலங்கைக்கு நாணய நிதியம் உதவி வழங்கக் கூடாது என்னும் கருத்தை தமிழ் அரசியல்வாதி களும் கருத்துருவாக்கிகள் என்போரும் முன் வைத்திருந்தனர்.

உண்மையில், நாணய நிதியத்தின் நிகழ்ச்சிநிரலில் நாடுகளின் மனித உரிமைகள் சார்ந்த பொறுப்புக் கூறல் விடயம் இல்லை. எனினும், இதனைப் புரிந்து கொள்ளாமலேயே நமது சூழலில் தவறான கருத்துகள் முன் வைக்கப்பட்டிருந்தன.

இந்த விடயம் தொடர்பில் எமது முன்னைய ஆசிரியர் தலையங்கங்களில் குறிப்பிட்டிருக்கிறோம். சர்வதேச விவகாரங்கள் தொடர்பில் போதிய புரிதல் இல்லாமல் தமிழ் மக்கள் மத்தியில் போலியான நம்பிக்கைகளை முன்வைக்கும் போக்கானது நமது அரசியல் சூழலில் காணப்படும் ஒரு நீண்ட காலப் பிரச்சனை தான்.

பாகிஸ்தானுக்கும் நாடு கடந்த பயங்கரவாத அமைப்புகளின் வளர்ச்சிக்கும் இடையிலான தொடர்பு உலகம் அறிந்த ஒன்று. அமெரிக்க இரட் டைக் கோபுர தாக்குதலின் சூத்திரதாரியான ஒஸாமா பின்லேடன் ஒன்பது ஆண்டுகளாக பாகிஸ்தானின் இராணுவ மற்றும் புலனாய்வு அமை ப்பின் ஆதரவுடன் தான் தலைமறைவாக இருந் தார்.

இறுதியில் அமெரிக்காவின் இரகசிய தாக்குதல் நடவடிக்கை ஒன்றின் மூலம் 2011இல் பாகிஸ் தானில் வைத்து பின்லேடன் கொல்லப்பட்டார். பாகிஸ்தான் அரசை நம்ப முடியாது என்னும் அடிப்படையில் தான் ஒபாமா நிர்வாகம் குறித்த தாக்குதலை பாகிஸ்தானுக்குத் தெரியாமலேயே அந்த நாட்டுக்குள் மேற்கொண்டது.

அந்தளவுக்கு பாகிஸ்தானிய அரச இயந்திரமும் சர்வதேச பயங்கரவாத அமைப்புகளும் பிரிக்க முடி யாத தொடர்பில் இருக்கின்றன.

இவ்வாறான பின்னணி கொண்ட ஒரு நாட்டுக்கு அதிலும் இந்தியாவோடு யுத்தம் ஒன்று மூளக்கூடிய நிலைமை காணப்படுகின்ற சூழலில் கூட சர்வதேச நாணய நிதியம் பாகிஸ்தானுக்கான நிதியுதவியை உறுதிப்படுத்தியிருக்கிறது.

இந்த அடிப்படையில் சிந்தித்தால், நாணய நிதியம் தமிழ் மக்களின் மனித உரிமைகளை கருத்தில் கொண்டு இலங்கை மீது அழுத்தங்களைப் பிரயோகிக்கும் என்று எண்ணுவதானது எந்தளவு க்கு தவறானது என்பதை ஒருவர் புரிந்து கொள்ள முடியுமல்லவா!

இனியும் இவ்வாறு எண்ணினால், அதனை விட வும் ஒரு சிறுபிள்ளைத்தனம் இருக்க முடியுமா?

# இனப்படுகொலை குற்றச்சாட்டுக்கள், நினைவுத்தூபி அனுமதி கனடாத் தூதுவரிடம் வெளிவிவகார அமைச்சர் கடும் ஆட்சேபனை

இனப்படுகொலை குற்றச்சாட்டுகள் மற்றும் கனடாவில் தமிழர் இனப்படு கொலை நினைவுத்தூபியை அமைப்ப தற்கு அனுமதி வழங்கப்பட்டமை குறித்து இலங்கை வெளிவிவகார அமைச்சர் விஜிதஹேரத் இலங்கைக் கான கனடா உயர்ஸ்தானிகர் எரிக் வோல்ஷிடம் தனது கடும் ஆட்சே பனையை வெளியிட்டுள்ளார்.

இலங்கை வெளிவிவகார அமைச்சிற்கு கனடா தூதுவரை அழைத்து வெளி விவகார அமைச்சர் தனது கடும் ஆட்சேபனையை வெளியிட்டுள்ளார் இது குறித்து அவர் சமூக ஊடக பதிவில் தெரிவித்துள்ளதாவது.

ஆதாரமற்ற இனப்படுகொலை குற்றச் சாட்டுகள், அது தொடர்பில் நினைவுத் தூபியை ஸ்தாபிப்பதற்கு அனுமதி வழங்கியமை குறித்த இலங்கை அரசாங்கத்தின் கடும் ஆட்சேபனையை இலங்கைக்கான கனடாவின் உயர் ஸ்தானிகரிடம் வெளியிட்டேன்.

இலங்கையின் பன்முகதன்மை கொண்டே சமூகங்களிடையே தேசிய ஒற்றுமை தேசிய நல்லிணக்கம் மற்றும் நீடித்த அமைதியை ஏற்படுத்துவதற் கான அரசாங்கத்தின் தொடர்ச்சியான முயற்சிகளிற்கு இது தடையாகவும் விளங்கும் சிக்கலை ஏற்படுத்தும் என வும் தெரிவித்தேன்.

இது குறித்து இலங்கை வெளிவிவ கார அமைச்சு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது – இலங்கையில் நடந்த இறுதிக் கட்ட யுத்தத்தின் போது, இனப்படுகொலை நடந்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டானது, தேசிய அல்லது சர்வதேச அளவில் எந்த வொரு நம்பகமான அதிகாரியாலும் ஆதாரத்துடன் நிரூபிக்கப்படாதது டன், அவை தவறான தகவல்களை அடிப்படையாகக் கொண்ட குற்றச் சாட்டுகள் என இலங்கை அரசாங்கம் தொடர்ந்தும் வலியுறுத்துகிறது. இந்தப்பொய்யான கதையை இலங்கை முற்றிலும் நிராகரிப்பதுடன், கனடா விற்குள் தத்தமது தேர்தல் ஆதாயங் களுக்காக இவ்வாறு பிரச்சாரம் செய்யப் பட்டுள்ளதாக நம்புகிறது.

2021, ஏப்ரலில், கனடாவின் வெளிநாட்டு அலுவல்கள், வர்த்தகம் மற்றும் அபி விருத்தித் திணைக்களம், இலங்கை யில் இனப்படுகொலை நடந்ததாக எந்தவொரு கண்டு பிடிப்பையும் கனடா அரசு மேற்கொள்ளவில்லை என்பதை அதிகாரப்பூர்வமாக உறுதிப் படுத்தியது குறிப்பிடத்தக்கது. மேல திகமாக, 2006 இல் கனடாவானது, தமிழீழ விடுதலைப் புலிகளை பயங் கரவாத அமைப்பொன்றாக அறிவித்த துடன், 2024 ஜீனில் இவ்வகைப்படு த்தலை மீண்டும் உறுதிப்படுத்தியது.

கனடாவின் பிராம்ப்டன் நகரில் உள்ள சிங்க்வகௌசி பூங்காவில், தமிழ் இனப் படுகொலையைக் குறிக்குமுகமாக நினைவுச்சின்னமொன்றை நிர்மாணிப்ப து குறித்து, இலங்கை அரசு பல முறை தனது கடுமையான கண்டனங் களைத் தெரிவித்துள்ளது.



பிராம்ப்டன் நகர சபையின் இவ்வருந்த த்தக்க முயற்சியைத் தலையிட்டுத் தடுக்குமாறு, கனடாவின் மத்திய அரசை இலங்கை அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

இச்செயற்பாடு குறித்த முன்னெடுப்புக் களை, பரந்தளவிலான இலங்கை மற்றும் கனேடிய சமூகங்களுக்கு எதிரானதான ஒன்றாகவே இலங்கை அரசு கருதுகிறது. இத்தகைய ஆதார மற்ற குற்றச்சாட்டுகளைப் பரப்புவதும், கட்டுக்கதைகளை அடிப்படையாகக் கொண்ட நினைவுச் சின்னங்களை நிர்மாணிப்பதும் பொதுமக்களை தவறாக வழிநடத்துவது மட்டுமல்லா மல், அனைத்து சமூகங்களுக்கிடை யில் நல்லிணக்கம், தேசிய ஒற்றுமை மற்றும் நீடித்த அமைதிக்கான இலங்கையின் அயராத முயற்சிகளைச் சீர்குலைப்பவையாக அமையுமென இலங்கை அரசு உறுதியாக நம்பு கிறது.

இது தொடர்பில், வெளிநாட்டு அலு வல்கள் அமைச்சர் விஜித ஹேரத் கனேடிய உயர் ஸ்தானிகரைச் சந்தித்து ஆதாரமற்ற இனப்படுகொலை குற்றச் சாட்டுகள் மற்றும் அதனை அடிப் படையாகக் கொண்ட நினைவுச் சின்னத்தை நிர்மாணிப்பதற்கான ஒப்பு தல் தொடர்பில், இலங்கை அரசாங்க த்தின் கடுமையான ஆட்சேபனைகளை மீண்டும் வலியுறுத்தியதுடன், இம் முன்னெடுப்புக்கள் நல்லிணக்கம் மற்றும் தேசிய ஒற்றுமைக்கான அரசா ங்கத்தின் முயற்சிகளை சிக்கலாக்குவ துடன், அவற்றை பெரிதும் பலவீனப் படுத்துகிறதெனவும் குறிப்பிட்டுள்ளார்.

# 3 மாதத்திற்குள் பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படும்?



பயங்கரவாத தடை சட்டத்தை மூன்று மாதத்திற்குள் நீக்குவது குறித்து அரசாங்கம் அவதானம் செலுத்தியுள் ளது. இதன் பிரகாரம் நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடை சட்டத்தை முழுமையாக நீக்கவும், அதற்கு பதி லாக புதிய சட்டம் ஒன்றை நிறை வேற்ற அரசாங்கம் தீர்மானித்துள்ள துடன், நிகழ்நிலை பாதுகாப்பு சட்டத்தை முழுமையாக நீக்காது திருத்தங்களை கொண்டு வரவும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்று வெளிவிவகார அமைச்சு தெரி வித்தது.

இலங்கையில் நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடை சட்டம் குறித்து பல்வேறு சர்ச்சைகள் நீண்டகாலமாக உள்ளது. குறிப்பாக விடுதலை புலி களுக்கும் அரச படைகளுக்கும் இடையிலான போர் 2009 ஆம் ஆண்டில் நிறைவடைந்த பின்னரும் இந்த பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை பயன்படுத்தி பல்வேறு கைதுகள் இடம் பெற்றது.

இதனை சர்வதேச நாடுகளும் உள்ளூர் மனித உரிமைகள் செயல்பாட்டளர் களும் கண்டித்திருந்தனர். குறிப்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை மற்றும் ஐரோப்பிய ஒன்றியும் போன்ற சர்வதேச அமைப்புகள் பயங் கரவாத தடை சட்டத்தை சுட்டிக் காட்டி கடும் விமர்சனங்களை இலங்கைக்கு எதிராக முன்வைத்திரு ந்தது.

இவ்வாறானதொரு எதிர்ப்பு நிலை இன்றும் தொடர்கின்ற நிலையில், ஜி.எஸ்.பி பிளஸ் வரிச் சலுகை போன்ற சர்வதேச ஒத்துழைப்புகளை பெறுவ தற்கும் நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடுப்புச் சட்டம் மற்றும் அதன் பயன்பாடு தடையாக உள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி பிளஸ் கண்காணிப்புக் குழுவின் அண்மைய இலங்கை விஜயத்தின் போதும் பயங்கரவாத தடை சட்டம் குறித்து பேசப்பட்டுள்ளது. ஜி.எஸ்.பி பிளஸ் வரிச் சலுகையில் பயனடையும் குறைந்த அல்லது குறைந்த நடுத்தர வருமானம கொண்ட 8 நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும்.

மனித உரிமைகள் தொழிலாளர் உரிமைகள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, காலநிலை மாற்றம் மற்றும் நல்லாட்சி தொடர்பான 27 சர்வதேச மரபுகளை அங்கீகரித்த பொருளாதார ரீதியில் பாதிக்கப்படக கூடிய வளரும் நாடு களிக் நலன் கருதி இந்த சலுகை வழங்கப்படுகிறது. ஜி.எஸ்.பி பிளஸ் வரிச் சலுகையை பெறும் நாடுகளை இரண்டு வருடங்களுக்கு ஓரமுறை மதிப்பீடு செய்து சலுகைக்கான ஒப்பந்தம் புதுப்பிக்கப்படும்.

இவ்வாறானதொரு நிலையில் மனித உரிமைகளின் பாதுகாப்புக்கு நடை முறையில் உள்ள பயங்கரவாத தடை சட்டம் கடும் சவாலாக உள்ளமை யினால் அதன நீக்குவதற்கான பரிந் துரையை ஐரோப்பிய ஒன்றியம் ஏற்கனவே இலங்கைக்கு முன்வைத்து ள்ளது. இதேவேளை பயங்கரவாத தடை சட்டத்தை நீக்குவதாக ஆட்சி க்கு வருவதற்கு முன்னர் தற்போதைய அரசாங்கம் தெரிவித்திருந்தமை குறிப் பிடத்தக்கது.


# யூன் மாதம் அர்ச்சுனா எம்.பிக்கு எதிரான மனு மீதான விசாரணை ஆரம்பமாகும்!

இராமநாதன் அர்ச்சுனாவின் பாராளு மன்ற உறுப்பினர் பதவியை இரத்து செய்வதற்கு உத்தரவிடுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு எதிர் வரும் ஜீன் மாதம் 26 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என மேன்முறையீட்டு நீதிமன்றம் 14 மே 2025 புதன்கிழமை உத்தரவிட்டுள்ளது.

அர்ச்சுனாவின் பாராளுமன்ற உறுப்பி னர் பதவியை இரத்து செய்வதற்கு உத்தரவிடுமாறு கோரி சமூக செயற் பாட்டாளரான ஓஷல ஹேரத் என்ப வரால் நீதிமன்றில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

024 பொதுத் தேர்தலில் அரச மருத் துவ அதிகாரியாக அர்ச்சுனா பதவி விலகாமல் தேர்தலில் போட்டியிட்ட தாகவும், இது அரசியலமைப்புச் சட்டத்தின் 91(1)(e) பிரிவை மீறுவ தாகவும் தெரிவிக்கப்பட்டு சமூக செயற்பாட்டாளர் ஓஷலா ஹெராத்தால் என்பவரால் அர்சுனாவிற்கு எதிராக இந்த மனுதாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு மாயாதுன்ன கொரயா மற்றும் மஹேன் கொபல்லவ ஆகி யோர் அடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.



சாட்சியங்களை உறுதிப்படுத்துவ தற்காக இந்த மனு எதிர்வரும் ஜீன் மாதம் 26 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் படும் என நீதிபதிகள் குழாம் உத்தர விட்டுள்ளது.

# இனி மேல் போர் வேண்டாம்! புதிய போப் லியோ அழைப்பு!



வத்திக்கானில் தனது முதல் ஞாயிற்றுக்கிழமை ஆசீர்வாதத்தின் போது, இனிமேல் போர் வேண்டாம் என்று உலக வல்லரசுகளுக்கு ஒரு செய்தியில், போப் லியோ ஓஜஏ வேண்டுகோள் விடுத்தார்.

உக்ரைன் போரில் 'நீடித்த அமைதி', காசாவில் போர் நிறுத்தம், இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான சனிக்கிழமை ஒப்பந்தத்தை வரவேற்று அவர் அழைப்பு விடுத்தார்.

செயிண்ட் பீட்டர்ஸ் சதுக்கத்தில் கூடியிருந்த கூட்டத்தினரிடம் உரையாற்றும் போது கன்னி மேரியின் நினைவாக ரெஜினா கேலி பிரார்த்தனையையும் அவர் வாசித்தார்.

கடந்த சனிக்கிழமையன்று அவர் ரோமுக்கு வெளியே உள்ள ஒரு ஆலயத்திற்குச் சென்று, பின்னர் சாண்டா மரியா மாகியோர் பசிலிக்காவில் உள்ள தனது மறைந்த முன்னோடி பிரான்சிஸின் கல்லறைக்கு முன் பிரார்த்தனை செய்தார். அடுத்த வாரம் மே 18 ஆம் திகதி செயிண்ட் பீட்டர்ஸ் சதுக்கத்தில் நடைபெறும் திருப்பலியில் போப் லியோ முறையாகப் பதவியேற்கிறார்.

வாடிகன் நகரில் இரண்டு நாள் மாநாட்டைத் தொடர்ந்து, வியாழக்கிழமை கத்தோலிக்க திருச்சபையின் புதிய தலைவராக போப் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

வெள்ளிக்கிழமை சிஸ்டைன் தேவாலயத்தில் போப்பாக தனது முதல் திருப்பலியை நடத்தி, பின்னர் நேற்று சனிக்கிழமை கார்டினல்களுடன் உரையாற்றிய போப்பாண்டவருக்கு இது ஒரு பரபரப்பான வாரமாக இருந்தது.

இந்த சந்திப்பின் போது அவர் தன்னை போப்பிற்கு தகுதியற்ற தேர்வாக விவரித்தார். மேலும் தனது முன்னோடியின் விலைமதிப்பற்ற மரபை தொடர சபதம் செய்தார். மிஷனரி பணி மற்றும் கலந்துரையாடலின் முக்கியத்துவத்தை அவர் எடுத்துரைத்தார்.

சமூக நீதி குறித்த போதனைகளுக்கு பெயர் பெற்ற 19 ஆம் நூற்றாண்டின் போப்பின் நினைவாக லியோ என்ற பெயரைத் தேர்ந்தெடுத்ததாக அவர் விளக்கினார்.

மனித கண்ணியம் மற்றும் நீதியைப் பாதுகாக்க இன்றைய தேவாலயம் அவசியமானது என்பதை செயற்கை நுண்ணறிவு மற்றும் பிற முன்னேற்றங்களின் வளர்ச்சி குறிக்கிறது என்றும் புதிய போப் கூறினார். அடுத்த ஞாயிற்றுக்கிழமை பதவியேற்பதற்கு முன்னதாக திங்கட்கிழமை ஊடகங்களுடன் ஒரு சந்திப்பை நடத்த உள்ளார்.

அந்தத் திருப்பலியின் ஒரு பகுதியாக, ஏராளமான நாட்டுத் தலைவர்கள் மற்றும் பிரமுகர்கள் முன்னிலையில் அவர் ஒரு மறையுரை நிகழ்த்துவார்.

69 வயதான இவர், செயிண்ட் பீட்டர் சிம்மாசனத்தில் 267வது குடியிருப்பாளர் ஆவார். மேலும் போப்பாண்டவராக ஆன முதல் அமெரிக்கர் ஆவார். 1.4 பில்லியன் மக்களைக் கொண்ட கத்தோலிக்க திருச்சபையின் உலகளாவிய சமூகத்தின் உறுப்பினர்களை அவர் வழிநடத்துவார்.

# தமிழ் இனப்படுகொலை நினைவுத்தூபி நாமலின் எதிர்ப்பு குடும்பத்தின் கரங்களில் இரத்தக்கறை பற்றிக்பிரவுண் காட்டமாகத் தெரிவிப்பு



கனடாவில் உருவாக்கப்பட்டுள்ள தமிழர் இனப்படு கொலை நினைவுத்தூபியை ராஜபக்ச குடும்பம் எதிர்ப்பதைது அந்த நினைவுத்தூபிக்கு கிடைத்த கௌரவமாகும் என கனடாவின் பிரம்டன் மேயர் பட்ரிக் பிரவுன் தெரிவித்துள்ளார். சமூக ஊடக பதிவில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

தமிழ் இனப்படுகொலை நினைவுத்தூபிக்கான ராஜபக்ச குடும்பத்தின் எதிர்ப்பு ,அந்த குடும்பத்தின் கரங்களில் அப்பாவிகள் கொல்லப்பட்டதை அங்கீகரிக்கும் சரியான பாதையில் நாம் சென்றுகொண்டிருக்கின்றோம் என்பதற்கான உறுதியான சமிக்ஞை

ராஜபக்ச குடும்பம் இனப்படுகொலை இடம்பெறவில்லை என உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தால் நீதியை குழப்புவதற்கான நடவடிக்கைள், வழக்கு விசாரணையிலிருந்து மறைந்திருத்தல் போன்றவற்றை கைவிட்டு விட்டு சர்வதேச விசாரணைகளிற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கவேண்டும். இது அவர்களின் நியுரம்பேர்க் தருணம், இந்த குடும்பம் பொறுப்புக்கூறலை எதிர்கொள்வதற்கு பதில், இலங்கை அரசால் பாதுகாக்கப்பட்ட நிலையில், ஆடம்பரத்தில் மறைந்துள்ளது. இது வெட்கக்கேடான விடயம்.

ராஜபக்ச குடும்பம் இழைத்துள்ள மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் போல்பொட் ,ஸ்லோபடான் மிலோசோவிக்,ஹென்றிச் ஹிம்லர்,மற்றும் புளிசியான் கபுகா ஆகியோர் இழைத்த மனித குலத்திற்கு எதிரான குற்றங்களுடன் போட்டியிடும் அளவிற்கும் மோசமானவை. கனடாவில் உருவாக்கப்பட்டுள்ள தமிழர் இனப்படு கொலை நினைவுத்தூபியை ராஜபக்ச குடும்பம் எதிர்ப்பதைது அந்த நினைவுத்தூபிக்கு கிடைத்த கௌரவமாகும்.

இது இவ்விறிருக்க தமிழ் இனப்படுகொலையை ஏற்றுக் கொள்ளாத இலங்கையர்கள் கனடாவில் இருந்து கொழும்புக்கு அனுப்பப்படுவார்கள் என்று பிரம்டன் நகர மேயர் குறிப்பிட்டுள்ளமை பாரதூரமானது. தமிழ் இனப்படுகொலை என்பது அடிப்படையற்ற குற்றச்சாட்டு. கனடாவில் வாழும் புலிகள் அமைப்பின் ஆதரவாளர்களுக்கு உத்வேகமளிக்கும் வகையில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் நிர்வாகம் அமைந்துள்ளது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஊடக பேச்சாளர் சஞ்ஜீவ எதிரிமான்ன தெரிவித்தார்.

# தமிழரசுக்கட்சியும் ஏனைய தமிழ்க்கட்சிகள் ஆட்சியமைக்க ஆதரவு தர வேண்டும் -சித்தார்த்தன்

தமிழரசுக் கட்சியும் சில சபைகளை விட்டுக்கொடுத்து ஏனைய தமிழ் கட்சிகள் ஆட்சியமைக்க ஆதரவு தர வேண்டும் என ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் இணை தலைவரும் ,நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபைகளில் தமிழரசுக் கட்சி ஆட்சியமைப்பதற்கு, ஒத்துழைப்பு வழங்க எதிர்பார்த்துள்ளதாக தெரிவித்த சித்தார்த்தன், தமிழரசுக் கட்சியும், சில சபைகளை விட்டுக்கொடுத்து ஏனைய தமிழ் கட்சிகள் ஆட்சியமைப்பதற்குரிய வழிவகைகள் செய்ய வேண்டும் என தாம் தமிழரசு கட்சியின் செயலாளரிடம் கோரியுள்ளதாக தெரிவித்தார்.

ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் இணை தலைவர்களுடன் இலங்கை தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் யாழ்ப்பாணம் கந்தரோடையில் உள்ள சித்தார்த்தனின் இல்லத்தில் 11 மே 2025 ஞாயிற்றுக்கிழமை சந்தித்து கலந்துரையாடினார்.இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான



த.சித்தார்த்தன், சுரேஸ் பிரேமச்சந்திரன், மு.சந்திரகுமார் உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.

உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைப்பது தொடர்பாகவும் எவ்வாறு செயற்படுவது என்பது தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது. இந்த சந்திப்பையடுத்தே தர்மலிங்கம் சித்தார்த்தன் ஊடகங்களுக்கு மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

# இனப்படுகொலை குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவை என்றால் அரசாங்கம் ஏன் சர்வதேச விசாரணையை எதிர் கொள்ள அச்சப்படுகிறது!

இலங்கை அரசாங்கத்திற்கு எதிரான இனப்படுகொலை குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை என அரசாங்கம் கருதினால் ஏன் அது சர்வதேச விசாரணைகளை எதிர்கொள்வது குறித்து இவ்வளவு தூரம் அச்சப்படுகின்றது என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப் பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கேள்வி எழுப்பியுள்ளார்?

இலங்கைக்கான கனடாவின் தூதுவரை அழைத்து எதிர்ப்பு வெளியிட்டமை குறித்த வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்தின் முகநூல் பதிவிற்கான பதில் பதிவில் அவர் இதனை தெரிவித்துள்ளார். அவர் அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது.

இலங்கை அரசாங்கம் தமிழ்மக்களிற்கு எதிரான இனப்படுகொலையில் ஈடுபட்டது என்ற குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை என உண்மையில் நீங்கள் கருதினால் சர்வதேச சுயாதீன குற்றவியல் விசாரணையை எதிர்கொள்வதற்கு – அரசாங்கம் தமிழர் களிற்கு எதிரான இனப்படுகொலையில் ஈடுபடவில்லை என்பதை நிரூபிப்பதற்கு நீங்கள் ஏன் இவ்வளவு தூரம் அச்சமடைகின்றீர்கள்?

நீங்கள் ஏன் ரோம் சட்டத்தை ஏற்றுக்கொண்டு அதில் கைச்சாத்திட்டு சர்வதேச குற்றவியல் நீதி மன்றம் விசாரணைகளை மேற்கொள்வதற்கு அனுமதிக்க கூடாது? உண்மை என்னவென்றால் அமைச்சரே அரசாங்கம் உண்மையை கண்டு அஞ்சி நடுங்குகின்றது. உண்மையே நல்லிணக்கத்திற்கான ஒரே வழி ஆனால் முன்னைய அரசாங்கங்கள் போன்று உங்கள் அரசாங்கமும் அதனை மறுக்கின்றது.



# வடக்கு கிழக்கில் 35 சபைகளில் தமிழரசுக்கட்சியே முதல் நிலை ஏனையோர் ஒத்துழைப்பது தார்மீகமென அரசியல் குழு தீர்மானம்

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் இலங்கைத் தமிழரசுக்கட்சி வடக்கு கிழக்கில் 35சபைகளில் முதல் நிலை பெற்றுள்ள நிலையில் அச் சபைகளில் ஆட்சி அமைப்பதற்கு தார்மீக அடிப்படையில் ஏனைய தமிழ், முஸ்லிம் கட்சிகள் ஒத்துழைக்க வேண்டும் என்று கட்சியின் அரசியல் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அக்கட்சியின் ஊடகப் பேச்சாளரும், பதில்பொதுச்செயலாளருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் அரசியல்குழுக் கூட்டம் 11 மே 2025 ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் உள்ள கட்சியின் மாவட்டக்கிளை அலுவலகத்தில் பிற்பகல் 3.00மணிக்கு நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம், பதில் பொதுச்செயலாளர் சுமந்திரன், பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், சாணக்கியன், கலையரசன், சத்தியலிங்கம், குலநாயகம் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

இதன் போது இலங்கைத் தமிழரசுக் கட்சி பெரும்பான்மை பெற்றுள்ள கரைச்சி, பூநகரி, புதுக்குடியிருப்பு, மற்றும் மட்டக்களப்பு மண்முனை மேற்கு ஆகிய சபைகளில் மட்டுமே அறுதிப்பெரும்பான்மையை தமிழரசுக் கட்சி கொண்டிருக்கின்றது.

இந்நிலையில் ஏனைய சபைகளில் எவ்வாறு ஆட்சி அதிகாரத்தினைக் கைப்பற்றுவது என்பது தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது. இச்சமயத்திலேயே




மேற்கண்டவாறு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

சுமார் ஒரு மணிநேரம் வரையில் நடைபெற்ற குறித்த கூட்டம் சம்பந்தமாக சுமந்திரன் தெரிவிக்கையில், நடைபெற்று நிறைவடைந்த உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் இலங்கைத் தமிழரசுக்கட்சி 58சபைகளில் போட்டியிட்டிருந்தது. அதில் 35 சபைகளில் முன்னிலை பெற்றுள்ளது.

அந்த வகையில் பெரும்பான்மை ஆசனங்களை பெற்ற கட்சி என்ற அடிப்படையில் எமது கட்சி ஆட்சி அமைப்பதற்குரிய ஒத்துழைப்புக்களை ஏனைய தமிழ், முஸ்லிம் கட்சிகள் வழங்க வேண்டிய தார்மீக கடமையைக் கொண்டிருக்கின்றன என்று தீர்மானித்துள்ளோம்.

அந்த வகையில் மேயர் மற்றும் தவிசாளர் பதவிகளுக்கு குறித்த சபைகளில் எமது கட்சியிலிருந்து தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் முன்மொழியப்படவுள்ளனர்.

வடக்கு கிழக்கு மொழிவாரியான பிராந்தியமாகும். அந்தப் பிராந்தியத்தில் சமஷ்டி அடிப்படையில் அதிகாரப் பகிர்வினை கோருகின்ற கட்சியாக இலங்கைத் தமிழரசுக்கட்சி கடந்த ஏழுக்கும் மேற்பட்ட தசாப்தங்களாக செயற்பட்டு வருகின்றது.


அந்தவகையில் தான் தமிழ் பேசும் கட்சிகள் எமது கட்சி ஆட்சி அமைப்பதற்கான ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும் என்று கோருகின்றோம். மேலும் இயற்கையாகவே, அதிக ஆசனங்கள் பெற்ற தரப்பினை ஆட்சி அமைப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குவது முறைமையாகும். அந்த வகையில் ஏனைய தமிழ், முஸ்லிம் தரப்புக்கள் எமக்கான ஒத்துழைப்புக்களையும், ஆதரவினையும் வழங்கும் என்ற நம்பிக்கை எமக்கு வலுவாக உள்ளது.

அது மட்டுமன்றி இலங்கைத் தமிழரசுக்கட்சி முன்னிலை பெறாத சபைகளில் ஏனைய தமிழ், முஸ்லிம் கட்சிகள் முன்னிலை பெற்றிருக்கும் பட்சத்தில் அக்கட்சிகள் ஆட்சியமைப் பதற்கான ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கு நாம் தயாராகவே இருக்கின்றோம் என்றார்.

இதேவேளை உள்ளூராட்சி சபைகளில் தமிழரசு கட்சியுடன் இணைந்து ஆட்சி அமைப்பதற்கு பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்பட்ட வருவதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் முஸ்லிம் காங்கிரஸின் தேசிய அமைப்பாளருமான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் தெரிவித்துள்ளார்.

யார் பெரும்பான்மையாக வெற்றி பெற்றிருக்கிறார்களோ அவர்களிடம் சேர்ந்து ஆட்சி அமைப்பதற்கும் நாங்கள் பெரும்பான்மையாக வென்ற பிரதேசங்களில் சகோதரக் கட்சிகளையும் இணைத்துக் கொண்டு ஆட்சி அமைப்பதற்கான பேச்சுவார்த்தை நடைபெற்று வருகின்றன.

நமது சகோதர கட்சியான இலங்கை தமிழரசு கட்சியுடனும் சில இடங்களில் நாங்கள் அவர்களும் இணைந்து ஆட்சி அமைப்பதற்கு பேச்சுவார்த்தை நடைபெற்று வருகின்றன எனவும் அவர் தெரிவித்தார்.


வங்கிக் கடன் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

Save 80%

- கடன் 80% குறைய நடவடிக்கை
  Reduce your debts upto 80%.
- கடனுக்கு விடுவிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுதப்படும்
  Stop all interest on your debts.
- கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
  Stop collection calls, legal action & garnishments.
- உங்கள் சொத்துகள் பாதுகாக்கப்படும்.
  Protect all your assets (House, Car, RRSP, RESP).
- மாதாந்த ரீதியில் அனைத்துக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்.
  Make one monthly patment to all of your creditors.
- வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்.
  GIve you solutions without bankruptcy.


CRC CREDIT RECOVERY CANADA

10 Milner Business Court, Unit 300
Website: www.creditrecoverycanada.ca

Suren Sornalingam BBA
Post Graduate Diploma In Business Management
Federal Government Registered & Certified (BIA)
Insolvency Counsellor.
Member of Canadian Insolvency Foundation

Over 20 Years Experience in the field of Insolvency

Tel: 647-274-2832
Email: info@creditrecoverycanada.ca



# தென்னிலங்கை அரசாங்கத்தோடு இணக்க அரசியல் செய்த ஈ.பி.டி.பி ஒட்டுக் குழு என்றால் 1948ம் ஆண்டு டி.எஸ் சேனநாயக்காவோடு இணக்க அரசியல் செய்த தமிழ்காங்கிரஸ் தானே மூத்த ஒட்டுக்குழு?




மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களோடு இணக்க அரசியலில் ஈடுபட்டமையினால் ஈ.பி.டிபி. ஒட்டுக் குழுவாம். தென்னிலங்கை அரசாங்கத்தோடு இணக்க அரசியல் செய்கின்ற கட்சி ஒட்டுக் குழு என்றால், டி.எஸ் சேனநாயக்கா காலத்திலேயே இணக்க அரசியல் செய்த அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தானே Most senior ஒட்டுக்குழு நீங்கள் தானே.

வெளிப்படைத் தன்மையோடு நடைமுறைச் சாத்தியமான அரசியலை முன்னெடுக்கின்ற தனித்துவமான அரசியல் தரப்பான ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியாகிய நாம், சொல்லுக்கும் செயலுக்கும் சம்மந்தமில்லாமல், நடைமுறைச் சாத்தியமற்ற வெறும் வீராப்பு அரசியலை முன்னெடுத்து வருகின்ற தமிழ் தேசிய முன்னணியினருக்கு ஆதரவளிப்பதும் நடைமுறையில் சாத்தியமற்றது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியினரைப் பொறுத்த வரையில் இப்போதுகூட கொள்கை ரீதியான உடன்பாடு கொள்கை ரீதியான கூட்டிணைவு என்று திரும்ப திரும்ப சொல்லி வருகின்றார்கள். அவர்களுடைய கொள்கை என்ன என்பது அவர்களுக்கே விளங்கவில்லை என்பதையே அவர்களின் செயற்பாடுகள் வெளிப்படுத்துகின்றன.

உதாரணமாக தூய நகரம் தூய்மையான நிர்வாகம் என்கிறார்கள். கடந்த மாகாண சபையிலே ஊழல் மோசடியில் ஈடுபட்டார் என்று குற்றஞ்சாட்டப்பட்டு குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டவர்களையும், கடந்த காலங்களில் நிதி நிறுவனம் நடாத்தி எமது மக்களின் பணத்தை கொள்ளையிட்டவர்கள் என்ற வலுவான குற்றச்சாட்டுக்களை எதிர்கொண்டவர்களையும் இணைத்து வைத்துக் கொண்டு தூய்மையான நிர்வாகம் பற்றி பேசுகிறார்கள்.

ஒற்றையாட்சியையும் எக்கிய இராச்சியத்தினையும் நிராகரிக்கின்றோம் என்று கற்பூரம் கொளுத்தி சத்தியம் செய்யாத கட்சிகளோடு ஒட்டவும் மாட்டோம் உறவாடவும் மாட்டோம் என்கிறார்கள்.

எக்கிய இராச்சியம் என்ற சொல்லாடல் பயன்படுத்தப்பட்ட புதிய அரசியலமைப்பை உருவாக்க ஆதரவு கொடுத்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவனை அரவணைத்து உறவாடிக் கொண்டு, குறித்த அரசியலமைப்பு உருவாக்கத்திற்கு பங்களிப்பு செய்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்தனுடனும் செல்வம் அடைக்கலநாதனுடனும் டீல் பேசுகின்றனர்.

இன்னொமொரு வேடிக்கை என்னவென்றால், ஈ.பி.டி.பி. தமிழ் தேசிய பரப்பில் செயற்படாத கட்சியாம். எங்களோடு பேசுவது தங்களுடைய கொள்கைக்கு மாறான செயற்பாடாம். ஆனால் ஈ.பி.ஆர்.எல்.எப். புளொட், ரெலோ, சமத்துவக் கட்சி உள்ளங்கிய ஜனநாயகக் தமிழ் தேசியக் கூட்டணியோடு பேசுவார்களாம். அவர்கள் தமிழ் தேசியப் பரப்பிலே செயற்படுகிறார்களாம்

தமிழ் தேசியத்திற்கு புறம்பான தரப்பாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியை அடையாளப்படுத்துகின்றவர்கள், 2015 ஆம் ஆண்டு வரையில் எமது கட்சியை வழி நடத்திய தலைவர்களுள் ஒருவரான தோழர் அசோக் என்று அறியப்பட்ட சந்திரகுமாருடன் இணைந்து உள்ளூராட்சி சபைகளை அமைக்க டீல் பேசுகின்றனர்.

இவ்வாறு தங்களுடைய செயலுக்கும் சொல்லுக்கும் சம்மந்தமில்லாமல் செயற்பட்டுக் கொண்டு, மக்களின் பிரச்சினைகளை தீராப் பிரச்சினைகளாக வைத்திருந்து சுயலாப அரசியல் செய்கின்ற தமிழ் தேசிய மக்கள் முன்னணியினருக்கு ஆதரவளிப்பதும் சாத்தியமற்றது என்ற அடிப்படையிலேயே எமது தீர்மானம் அமைந்திருக்கின்றது என்றார்.

தமிழ் மக்களின் அடையாளங்களை அழிக்க முயலும் தேசிய மக்கள் சக்திக்கோ, சொல்லுக்கும் செயலுக்கும் சம்மந்தமில்லாத தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்கோ ஆதரவில்லை என்று தெரிவித்துள்ள ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடகச் செயலாளர் ஸ்ரீகாந் பன்னீர்செல்வம், காத்திரமான எதிர்தரப்பாக உள்ளூராட்சி சபைகளை எதிர்கொள்ளவே கட்சி தீர்மானித்து இருப்பதாகவும் தெரிவித்தார்.

யாழ். ஊடக மையத்தில் 13 மே 2025 செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,


எம்மை பொறுத்த வரையில், தேசிய மக்கள் சக்தியும், அதேபோன்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியும் தவிர்ந்த தரப்புக்கள் உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சி அமைக்க எமது ஒத்துழைப்பு அவசியம் எனக் கருதி எம்மை அணுகும் பட்சத்தில் அவை தொடர்பாக சாதகமாக பரீசிலிக்க தயாராக இருக்கின்றோம்.

அவ்வாறான தேவை ஏற்படாத பட்சத்தில், ஆரோக்கியமான எதிர்தரப்பாக உள்ளூராட்சி மன்றங்களில் தனித்துவமாக மக்கள் நலன்சார்ந்து செயற்படுவதற்கு ஆர்வமாக இருக்கின்றோம்.

தேசிய மக்கள் சக்தி என்று சொல்லிக் கொள்ளுகின்ற ஜே.வி.பி. கட்சியினருக்கு ஆதரவு தெரிவிக்க மறுப்பதற்கு இனவாதமோ, இன ரீதியான சிந்தைகைளோ காரணம் இல்லை என்பதை முதலில் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். எம்மை பொறுத்தவரையில், எமது மக்களுடைய அபிலாசைகளை வென்றெடுப்பதற்கும், எமது மக்கள் எதிர் கொள்ளுகின்ற பிரச்சினைகளை தீர்வு காண்பதற்கும் தேசிய நல்லிணக்கம் அத்தியவசியமானது என்பதை உறுதியாக நம்புகின்றோம்.

அனைவரும் இலங்கையர், எல்லோருக்கும் சமத்துவம் போன்ற வார்த்தைகள் மூலம், எமது தனித்துவங்களையும் அடையாளங்களையும் நீர்த்துப் போகச் செய்து, வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மக்களின் தாயகம், தமிழர்கள் தேசிய இனம் போன்றவற்றுக்கான அடிப்படைகளை இல்லாமல் செய்வதற்கான ஆழமான நிகழ்ச்சி நிரலோடு செயற்படுகின்றார்கள் என்ற சந்தேகத்தினையும் ஏற்படுத்துகின்றது. இந்நிலையிலேயே ஜே.வி.பி. யினருக்கு ஆதரவளிப்பதில்லை என்று தீர்மானித்துள்ளோம் என்றார்.

# கமால் குணரட்ணவிற்கு எதிராக பிரிட்டன் தடைகளை விதிக்க வேண்டும்! பிரிட்டனிடம் ஆதாரங்களுடன் ஆவணங்களைச் சமர்ப்பித்தது ஐ.டி.ஜே.பி



இலங்கையின் முன்னாள் இராணுவ அதிகாரி கமால் குணரட்ணவிற்கு எதிராக தடைகளை விதிக்கவேண்டும் என கோரும் ஆவணத்தை ஆதாரங்களுடன் சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் பிரிட்டனின் வெளிவிவகார பொதுநலவாய அமைச்சிடம் கையளித்துள்ளது

இது தொடர்பில் ஐடிஜேபி மேலும் தெரிவித்துள்ளதாவது. இலங்கையில் யுத்தம் முடிவடைந்ததை குறிக்கும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினத்தை நாங்கள் நெருங்கிக் கொண்டிருக்கின்ற இந்த தருணத்தில் சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் இலங்கையின் முன்னாள் இராணுவ அதிகாரி கமால் குணரட்ணவிற்கு எதிராக தடைகளை விதிக்க வேண்டியமைக்கான ஆதாரங்கள் அடங்கிய ஆவணத்தினை மக்னிட்ஸ்கி தடைகளிற்காக பிரிட்டனின் வெளிவிவகார பொதுநலவாய சர்வதேவ அபிவிருத்தி அமைச்சிடம் கையளித்துள்ளோம்.

கமால் குணரட்ணவுடன் இணைந்து பணியாற்றிய 58வது படைப்பிரிவின் தளபதி சவேந்திர சில்வாவிற்கு எதிராக பாரிய மனித உரிமை மீறல்களிற்காக அமெரிக்கா தடை விதித்துள்ளதையும் அவரும் அவரது குடும்பத்தினரும் அமெரிக்காவிற்கு செல்ல முடியாது என்பதையும் நாங்கள் சுட்டிக்காட்டியுள்ளோம். பிரிட்டனும் சவேந்திர சில்வாவிற்கு எதிராக தடைகளை விதித்துள்ளது.

2009இல் கமால் குணரட்ண சவேந்திரசில்வாவின் கட்டளை தளபதியாக செயற்பட்ட ஜகத் ஜயசூரியவிற்கு எதிராக பிரிட்டன் தடைகளை அறிவித்துள்ளதையும் நாங்கள் சுட்டிக்காட்டியுள்ளோம்.( 2017இல் லத்தீன் அமெரிக்காவில் சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் இவருக்கு எதிராக சர்வதேச நியாயாதிக்கத்தினை தாக்கல் செய்தது என்பதை சுட்டிக் காட்டியுள்ளோம்.)



(அவுஸ்திரேலியாவிற்கு அவர் பயணம் மேற்கொள்வதை தடுப்பதற்காக குற்றவியல் குற்றச் சாட்டுகள் பதிவு செய்யப்பட்டதையும் தடைகளிற்கான வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டதையும் சுட்டிக்காட்டியுள்ளோம்)

யுத்த கால பாதுகாப்பு செயலாளராக பணியாற்றிய இவர்களின் தலைமை அதிகாரி கோட்டாபய ராஜபக்சவிற்கு எதிராக கனடா ஏற்கனவே தடைகளை விதித்துள்ளதை சுட்டிக்காட்டியுள்ளோம். மேலும் முன்னாள் ஜனாதிபதி யும் முன்னாள் பாதுகாப்பு அமைச்சருமான மகிந்த ராஜபக்சவிற்கு எதிராக கனடா தடைகளை விதித்துள்ளதையும் சுட்டிக் காட்டியுள்ளோம்.

# 14வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! மே மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

**அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.**
**தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா**
**செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)**
**பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)**
**உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)**
**உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)**
**பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்**
**இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்**

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

14 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

"தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

10 மே 2025 - 16 மே 2025 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ் வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதர வோடு கடந்த செப்டம்பர் முதல் 14வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

### மேலதிக விபரங்களுக்கு:-

### ஈழநாடு பரமேஸ் 416 841 9600

## 8வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி திலகவதி திருஞானசம்பந்தமூர்த்தி

வேலணை தலைகாட்டியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி திலகவதி திருஞானசம்பந்தமூர்த்தி (இளைப்பாறிய ஆசிரியை) அவர்களது எட்டாவது ஆண்டு நினைவு நாள் 17 மே 2025 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி திலகவதி திருஞானசம்பந்தமூர்த்தி அவர்களை நினைவு கூரும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 4வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி சாந்தகுமாரி சுப்பிரமணியம்

யாழ்.கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் சிங்கப்பூர், லண்டன், மலேசியா ஆகிய இடங்களை வதிவிடமாகவும கனடா மிஸிசாகாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி சாந்தகுமாரி சுப்பிரமணியம் அவர்களது நான்காவது ஆண்டு நினைவு நாள் 18 மே 2025 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி சாந்தகுமாரி சுப்பிரமணியம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 11வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி மனோண்மணி பாலசுந்தரம்

கிழக்கிலங்கை கோமாரியைப் பிறப்பிடமாகவும் திருக்கோவிலை வதிவிடமாகவும் கொண்டிருந்த இளைப்பாறிய முன்னாள் ஆசிரியை திருமதி மனோன்மணி பாலசுந்தரம் அவர்களது 11வது ஆண்டு நினைவு நாள் 10 மே 2025 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி மனோன்மணி பாலசுந்தரம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## சித்திரா பௌர்ணமி உபயம்



### திருமதி பாக்கியம் சின்னையா

புலோலி தெற்கு புலோலியைச் சேர்ந்த திருமதி பாக்கியம் சின்னையா அவர்களின் நினைவாக 11 மே 2025 சித்திரா பௌர்ணமி உபயமாக அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி பாக்கியம் சின்னையா அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 23வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி பரமேஸ்வரி கங்காதரன்

மூளாயைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி பரமேஸ்வரி கங்காதரன் அவர்களது 23வது ஆண்டு நினைவு நாள் 11 மே 2025 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி பரமேஸ்வரி கங்காதரன் நினைவு கூரந்து பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 59வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு கனகசபை பாலசிங்கம்

புங்குடுதீவு 3ம் வட்டாரம் குறிகாட்டுவானைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்த பொறளை பாலன் என்று அன்பாக அழைக்கப்படும் திரு கனகசபை பாலசிங்கம் அவர்களின் 59வது ஆண்டு நினைவுநாள் 16 மே 2025 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு கனகசபை பாலசிங்கம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




03 மே 2025 சனிக்கிழமை புங்குடுதீவு 5ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு நமசிவாயம் திருநாவுக்கரசு அவர்களது ஆறாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




04 மே 2025 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி பரமேஸ்வரன் யசோதரா அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திருமதி யசோதரா பரமேஸ்வரன் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்




06 மே 2025 திங்கட்கிழமை வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் மண்கும்பான் மேற்கை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு நாகரெத்தினம் முருகேசு அவர்களது நான்காவது ஆண்டு நினைவு நாளாகும். அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




08 மே 2025 வியாழக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி மனோரஞ்சன் கிறிஸ்ரா தம்பதிகளின் செல்வப்புதல்வன் பிறிடன் மனோரஞ்சனின் 11வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் பிறிடன் தனது பெற்றோர்கள் உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்




10 மே 2025 சனிக்கிழமை கிழக்கிலங்கை கோமாரியைப் பிறப்பிடமாகவும் திருக்கோவிலை வாழ்விடமாகவும் கொண்டிருந்த இளைப்பாறிய ஆசிரியை திருமதி மனோன்மணி பாலசுந்தரம் அவர்களது 11வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




11 மே 2025 ஞாயிற்றுக்கிழமை சித்திரா பௌர்ணமி விரத உபயமாக ஊரெழுவைச் சேர்ந்த திருமதி சிவபாக்கியவதி நல்லையா அவர்களை நினைவு கூர்ந்து அன்னாரது குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




11 மே 2025 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி பாலா பவானி தம்பதிகளின் செல்வப்புதல்வன் சாகித்தியன் பாலா அவர்களது 29வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் சாகித்தியன் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




11 மே 2025 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி பாலா பவானி தம்பதிகளின் செல்வப்புதல்வன் சாகித்தியன் பாலா அவர்களது 29வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் சாகித்தியன் தனது பெற்றோர்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




11 மே 2025 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி பாலா பவானி தம்பதிகளின் செல்வப்புதல்வன் சாகித்தியன் பாலா அவர்களது 29வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் சாகித்தியன் தனது பெற்றோர்களுடன் இணைந்து செஞ்சோலைக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




11 மே 2025 ஞாயிற்றுக்கிழமை மூளாயைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பரமேஸ்வரி கங்காதரன் அவர்களது 23வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




11 மே 2025 ஞாயிற்றுக்கிழமை சித்திரா பௌர்ணமி விரத உபயமாக புலோலி தெற்கு புலோலியைச் சேர்ந்த திருமதி பாக்கியம் சின்னையா அவர்களை நினைவு கூர்ந்து அன்னாரது குடும்பத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




13 மே 2025 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி கோணேஸ்வரன் சுதர்சினி தம்பதிகளின் செல்வப்புதல்வி சௌமியா கோணேஸ்வரன் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி சௌமியா தனது பெற்றோர்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




13 மே 2025 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் இசை ஆசிரியை ஸ்ரீமதி சாருமதி மனோகாந்தன் அவர்களது புறந்த நன்நாளாகும். அன்றையதினம் ஸ்ரீமதி சாருமதி மனோகாந்தன் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




16 மே 2025 வெள்ளிக்கிழமை புங்குடுதீவு 3ம் வட்டாரம் குறிகாட்டுவானைச் சேர்ந்த பொறளை பாலன் என்று அன்பாக அழைக்கப்படும் திரு கனகசபை பாலசிங்கம் அவர்களது 59வது ஆண்டு நினைவு தினமாகும். அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




16 மே 2025 வெள்ளிக்கிழமை கனடா Exevitive woodwork Ltd ஊழியர்கள் செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.

# Albert Campbell Square
## (Scarborough Town Centre)

அல்பேர்ட் காம்பெல் சதுக்கத்தில்

# தமிழின அழிப்பு நினைவு நாள்

**மே 18 ஞாயிற்றுக்கிழமை மாலை 6:00 மணி**

## தமிழின அழிப்பின் 16ஆம் ஆண்டு நினைவு நாள்

நிகழ்வு :1 பிரம்டனில் (Chinguacousy Park, Brampton) அமைந்துள்ள தமிழின அழிப்பு நினைவகத்தில் காலை 11:00 மணி முதல் 12:00 மணிவரை நினைவுத் தீபம் ஏற்றி மலர் வணக்கம் செலுத்துதல்

நிகழ்வு :2 வழமைபோல் மாலை 6:00 மணிக்கு அல்பேர்ட் காம்பெல் சதுக்கத்தில் நிகழ்வுகள் நடைபெறும்.




# TAMIL GENOCIDE Remembrance Day

முள்ளிவாய்க்கால் உறவுகளுக்கு
நினைவுத் தீபம் ஏந்துவோம்

Join us to commemorate and memorialize the genocide committed against the Tamil people in Sri Lanka

437 431 9301 | 647 914 2178

**கனடியத் தமிழர் சமூகமும் மாணவர் சமூகமும்**



நாட்டுப்பற்றாளர் **திரு. மதிசூடி** நினைவரங்கத்தில்
உங்கள் அபிமான
**ஈழநாடு** பத்திரிகையின்

# 32 வது ஆண்டு விழா



கலைமாமணி டாக்டர்

## நித்யஸ்ரீ மகாதேவன்

வழங்கும்

## சங்கீத சங்கமம் 2025



ஈழத் தமிழினத்தின்
செஞ்சொற்செல்வர்

## ஆறு திருமுருகன்

அவர்கள் வழங்கும் சிறப்புரை

## வேர்களைத் தேடுங்கள்

இந்நிகழ்வு மூலம் சேகரிக்கப்படும் நிதி **கனடா தமிழ் சமூக மையத்திற்கும்** ஈழத்தின் அறப்பணியாளர் - செஞ்சொற்செல்வர் **ஆறு திருமுருகனது சமூகப் பணிக்கும்** ஈழநாடு வாசகர்கள் சார்பில் வழங்கப்படும்.

**அன்பளிப்பு** VIP | $100 | $50

என் இனிய உறவுகளே! ஓர் உயர்வான நோக்கத்திற்காகவும் - கனடிய மண்ணில் எமது அடையாளத்துக்காகவும் தாயக மண்ணில் எமது இருப்பை உறுதி செய்யவும் நடாத்தப்படும் இந்நிகழ்வு தொடர்பான இத்தகவலை உங்கள் முகநூல் மூலமாகவும் தனிப்பட்ட முறையிலும் உங்கள் நண்பர்களுக்கும் பகிர்ந்து உங்கள் ஆதரவை வழங்குங்கள்.

**SUNDAY**
**JUNE 01 2025**
**@5:30PM**

**METROPOLITAN CENTRE**
**3840 FINCH AVE EAST**
SCRBOROUGH ( FINCH/ KENNEDY)

தொடர்புகளுக்கு
**ஈழநாடு பரமேஸ்**
416-841-9600
eelanadu1993@gmail.com

***விழா 5.30 மணிக்கு ஆரம்பமாகும். 10.30 மணிக்கு நிறைவு பெறும். நேரடி ஒளி, ஒலி பரப்புக் கிடையாது.***

# வடக்கு கிழக்கல் உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் கூறும் செய்தியும் தமிழ்த்தேசிய அரசியலில் எதிர்காலமும்

கட்டுரையாளர்
கொழும்பில் இருந்து
பேரா. சர்வேஸ்வரன்



நடைபெற்று முடிந்த உள்ளூராட்சித் தேர்தலானது வெறுமனே உள்ளூராட்சிக்கான வினைத்திறன் மிக்க நிர்வாகத்தை நடத்தவல்ல வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்கானதாக மட்டுமின்றி அதிக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக எதிர்நோக்கப்



பட்டது. இதன் முடிவுகள் தமிழ்த் தேசிய அரசியல், அதன் போக்கு ஆகியவற்றில் சாதகமான மாற்றத்தை ஏற்படுத்தவல்லதாக அமைய வேண்டும் என்பது ஒன்று.

தமிழ்த் தேசிய நீரோட்டத்தை திசை திருப்பி மடைமாற்றி வலுவிழக்கச் செய்யும் நிகழ்ச்சி நிரலுடன் செயற்படும் சிங்கள பௌத்த மேலாதிக்க சக்திகள் வடக்கு கிழக்கில் காலூன்றுவதை தடுப்பதாக அமைய வேண்டும் என்பது மிக முக்கியமான இன்னோர் எதிர்பார்ப்பாகும்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் வடக்கு கிழக்கில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் பிரதிநிதித்துவதற்கு ஈடாக சிங்கள பௌத்த மேலாதிக்கக் கொள்கையை அடிப்படைக் கோட்பாடாகக் கொண்ட தேசிய மக்கள் சக்தி முகமூடியணிந்த ஜே.வி.பி.யும் தேர்வு செய்யப்பட்டது.

இது இனமோதல் என்ற ஒன்று இல்லை என்ற மூடி மறைப்பு பிரச்சாரத்துக்கும் பலத்த எதிர்ப்பின்றி சிங்கள பௌத்த ஆக்கிரமிப்பை வடக்கு கிழக்கில் தொடர்வதற்கும், தமிழர் தாயக நிலங்களை அபகரிப்பதற்கும், இனமோதல் தீர்வு தொடர்பில் பேசவல்ல சர்வதேச சக்திகளின் வாயை அடைக்கவும் ஏதுவாக அமைந்தது. இப்பலமான மக்கள் ஆதரவு தமிழ்த் தேசியத் தலைமைகளின் குரலையும் பலவீனப்படுத்தியது. பலவீனப்படுத்துகிறது. எனவே தான் இவ்வுள்ளூராட்சித் தேர்தலான நாடாளுமன்றத் தேர்தலில் தவறாகத் தமிழ் மக்கள் எழுதிய விதியைத் திருத்தி எழுதும் முக்கிய சந்தர்ப்பமாக எதிர்பார்க்கப்பட்டது.

இந்தப் பின்னணியில் தேர்தல் முடிவுகளை நோக்கலாம். ஒட்டுமொத்தமாக நோக்கின் இலங்கைத் தமிழரசுக் கட்சி வடக்கு கிழக்கில் மூன்று லட்சத்திற்கும் அதிகமான வாக்குகளைப் பெற்று முன்னூறுக்கு மேற்பட்ட ஆசனங்களையும் பெற்றுள்ளது. இதற்கு அடுத்தபடியாக தேசிய மக்கள் சக்தி இன்னமும் வலுவாக உள்ளன. மூன்றாவது இடத்தில் ஏறத்தாழ ஒரு லட்சம் வாக்குகளைப் பெற்று நூற்றி ஆறு ஆசனங்களுடன் மூன்றாவது இடத்தில் உள்ளது.

இவை தவிர அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் 80 இற்கு மேலான ஆசனங்களைப் பெற்று நாலாம் இடத்தில்'' உள்ளது. தமிழ்த் தேசியக் கட்சிகளின் வாக்கு அதிகரிப்பை பொறுத்தவரை இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி, தமிழ்க் காங்கிரஸ் ஆகியன ஏறத்தாழ இரட்டிப்பான வாக்குகளை வடக்கிலும் இரட்டிப்பிற்கு சற்றுக் குறைவாக கிழக்கிலும் பெற்று நாடாளுமன்றத் தேர்தலில் விட்ட தவறை மக்கள் குறிப்பிடத்தக்க அளவு திருத்தி எழுத்தியுள்ளார்கள்.

இதேவேளை தேசிய மக்கள் சக்தி குறிப்பிடத்தக்களவு தனது வாக்குகளை இழந்துள்ளது. குறிப்பாக யாழ். மாவட்டத்தில் ஏழத்தாழ 16000 வாக்குகள் கடந்த தேர்தலை விட குறைந்துள்ளது. எனவே தமிழ்த் தலைமைகள் எதிர்பார்த்ததற்கு கிட்டவாகவே மக்கள் தீர்ப்பு அமைந்துள்ளது.

அதேவேளை இம்முடிவுகள் இரண்டு முக்கிய விடயங்களை வெளிப்படுத்தியுள்ளன. ஒன்று தமிழ்த் தேசியக் கட்சிகளின் வாக்குகள் குறிப்பிடத்தக்களவு அதிகரித்த போதும் வடக்கு கிழக்கில் ஒரு சில சபைகள் தவிர்ந்த எந்த சபையிலும் எந்த ஓர் கட்சியும் தனியாக ஆட்சியமைக்கும் வகையில் முடிவுகள் அமையவில்லை. மாறாக தமிழ்த் தேசியக் கட்சிகள் கூட்டணியாக ஆட்சியமைத்தாக வேண்டிய நிர்ப்பந்தத்தை இம்முடிவுகள் வெளிப்படுத்தியுள்ளன. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் பிரிந்து நின்ற தமிழ்க்கட்சிகளைத் தண்டிப்பது போல் அமைந்ததென எடுத்துக் கொண்டால் இத் தேர்தல் முடிவுகள் நீங்கள் ஒன்றுபட்டாக வேண்டும்.

ஒன்றுபட்டு இனமோதல் தீர்வு விடயங்களை முன்னெடுக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. அதேவேளை இரண்டாம் இடத்தில் இன்னமும் ஜே.வி.பி. வைக்கப்பட்டுள்ளமையானது தமிழ்த் தேசியத் தலைமைகள் இணைந்து கூட்டாக உள்ளூராட்சி அதிகாரங்களைக் கையிலெடுத்து வினைத்திறனுடன் செயற்பட முடியாவிட்டால் மீண்டும் இன மேலாதிக்க சக்திகள் வளர்வதற்கான தளங்கள் அழிக்கப்படவில்லை என்ற எச்சரிக்கையையும் இத்தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்தி நிற்கின்றன. ஆகவே பந்து இப்போது தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளின் எல்லைக்குள் போடப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கட்சிகளைப் பொறுத்தவரை இவ்விடயத்தில் இரண்டு முக்கிய சவால்களை எதிர்நோக்கியுள்ளன.

ஒன்று: கூட்டு என்பது தமிழ்த் தேசியக் கட்சிகளுடனானதாக இருக்க வேண்டும். எந்த ஓர் சிங்களக் கட்சிகளுடனும் இருக்க முடியாது.

இரண்டு: சபைகளை நிர்வகிக்கும் கூட்டாக மட்டும் அமையுமா? கொள்கையிலும் கூட்டிணைவு ஏற்படுமா? கள யதார்த்தங்களை நோக்கினால் தமிழரசுக்கட்சியும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியன மட்டுமே வடக்கு கிழக்கு முழுவதும் பரவலாக போட்டியிட்டு ஆசனங்களைக் கொண்டுள்ளன. தமிழ்க் காங்கிரசைப் பொறுத்தவரை யாழ். மாவட்டத்தில் மட்டுமே குறிப்பிடும்படியாக உள்ளது. அதற்கு வெளியே அக்கட்சியின் வாக்குகள் குறிப்பிடும் படியாக இல்லை. இங்கு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெருமளவு சபைகளின் ஆட்சியைத் தீர்மானிக்கும் சக்தியாக உள்ளது. எனவே யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரை தமிழ்க் காங்கிரஸ் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஆதரவை நாடும் நிலையும் பொதுவாக வடக்கு கிழக்கிலும் குறிப்பாக வடக்கின் அனைத்து மாவட்டங்களிலும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஆதரவை தமிழரசு நாடி நிற்பதும் தற்போதைய நிலையாகும்.

சிங்கள பௌத்த மேலாதிக்க சக்திகள் உள்ளூராட்சிகளில் எவ்வகையிலும் பலம்பெற்று விடக் கூடாது என்ற அடிப்படை நிலைப்பாட்டில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி உறுதியாகவுள்ளது. அதேவேளை யாழ். மாவட்டத்தில் காங்கிரசுடனும் ஏனைய மாவட்டங்களில் தமிழசுடனும் இணைத்து செயற்படுவதென்பது சரியாக அமையாது என்ற நோக்கிலும் நியாயமுண்டு. இதுவரை கால அனுபவமானது பல கட்சிகளின் கூட்டாக பலமாக இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடைத்தது தமிழரசுக் கட்சியே. அதேபோல் ஏனைய அனைவரும் துரோகிகள் இந்திய முகவர்கள் என பட்டம் வழங்கி யாருடனும் சேர்த்தியங்க மாட்டோம் அது பற்றிப் பேசவே வரமாட்டோம் என அடம்பிடித்து வந்தது தமிழ்க்காங்கிரஸ் கட்சி.

இப்போது இவ்விரு தரப்பும் ஒன்றுபட்டு ஆட்சியமைப்பதற்கான கோரிக்கையை முன் வைத்தாலும் அக் கோரிக்கைகள் அடிப்படையில் தாம் ஆட்சியமைப்பதற்கு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவைக் கோரும் தொனியிலானதே தவிர எதிர்காலத்தில் இணைந்து தொடர்ந்து செயற்படுவது என்ற தொனியில் இல்லை.

தமிழ்க் கட்சிகளைப் பொறுத்தவரை நாங்கள்தான் தாய்க்கட்சி. எனவே ஏனையவர்கள் எம்முடன் எமது நிபந்தனைகளுக்குள் இணைந்து செயற்படலாமே தவிர நாம் ஏனையவர்களுடன் இணைய முடியாது என்ற நிலைப்பாட்டையும் நாங்கள் ஆலமரம் இணைந்து செயற்படுபவர்கள் குருவிச்சைகள் என்ற வகைப்படுத்தலையும அடிக்கடி வெளிப்படுத்தி வருபவர்கள். இதுவே கூட்டமைப்பின் தமிழரசு தவிர்ந்த ஏனைய கட்சிகள் ஒன்றிணைந்து பொதுவான யாப்பு, பெயர், பொதுச் சின்னத்தைக் கொண்டு சட்டப்படியாக கட்டமைக்கப்பட்ட கூட்டணியாக செயற்பட காரணமானது என்ற அண்மைய வரலாற்றுண்மையை மறந்து விட முடியாது.

எனவே மேற்கண்ட தமது நிலைப்பாடுகளை விடுத்து தமது நிலைப்பாட்டின்பால் மற்றவர்களைக் கொண்டு வரும் முரட்டு பிடிவாதங்களை விடுத்து உள்ளூராட்சி அதிகாரத்தில் உரியவர்களுக்கு உரிய மதிப்பளித்து ஆட்சியதிகாரங்களை நியாயமாக மங்கிட்டு இணைத்து ஆட்சிப் பொறுப்பேற்க முன்வருவார்களா?

அதே போல் இவ்வொற்றுமை சபைகளின் அதிகாரத்தைக் கைப்பற்ற மட்டும் தானா? இனமோதல் தீர்விலும் ஒன்றுபட்டு செயற்படத் தயாரா? இனமோதல் தீர்வில் அனைவரதும் இறுதி இலக்கு கூட்டாட்சி அல்லது சமஷ்டி என்பதாக இருந்தாலும் அதனை அடையும் வழிமுறை என்பதில் அர்த்தமற்ற முரண்பாடுகளை வெளிப்படுத்தி வருவதையும் மாற்ற வேண்டும்.

13வது திருத்தம் முழுமையாக நடை முறைப்படுத்தப்பட வேண்டும். மாகாணசபைத் தேர்தல் விரைந்து நடத்தப்பட வேண்டும் என்ற ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கட்டமைப்பின் நிலைப்பாடு தர்க்க ரீதியாகவும் அறிவுபூர்வமாகவும் யதார்த்தமானதும் அவசியமானதுமான வழிமுறையாகும்.

இவ்விடயத்தில் தமிழரசைப் பொறுத்தவரை 13ஐ நாம் தீர்வாக ஏற்கவில்லை. ஆனால் நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற நிலைப்பாடுமானது. நடைமுறைப்படுத்த தயங்கும் சிங்கள மேலாதிக்க சக்திகளின் நிலைப்பாட்டை வலுப்படுத்தும் அதேவேளை ஏனைய கட்சிகள் 13ஐ இறுதித் தீர்வாக ஏற்றுக் கொண்டவை போன்ற பிழையான பிம்பத்தை ஏற்படுத்தும் தன்மையானது.

தமிழ்க் காங்கிரசைப் பொறுத்தவரை 13ம் திருத்தத்தையும் மாகாண சபைகளையும் சவப்பெட்டிக்குள் வைத்து புதைத்து விட்டோம். அதை கிண்டுபவர்கள் ஒன்றையாட்சியை ஏற்றுக்கொண்டவர்கள். இந்திய அடிவருடிகள் என வசைபாடும் அதேவேளை இந்தியா 13 பற்றி பேசாதிருக்க வேண்டும் எனக் கூறும் அளவிற்கு மந்தமான நிலைப்பாட்டையே இன்றும் கொண்டுள்ளனர். 13ஐயே அழித்தொழிக்க முயலும் சிங்கள பேரினவாதத்திடம் சமஷ்டியை பெறுவதற்கு பலமான சர்வதேச ஆதரவு தேவை. அதற்கான வழிவரைபடமோ திட்டமோ, சமிக்ஞைகள் (22ம் பக்கம் பார்க்க)

# சேர்ந்து இயங்க வேண்டிய நேரம்!

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -





உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகள் கிடைத்த பின் முல்லைத்தீவில் இருந்து ஒரு தமிழரசுக் கட்சியின் ஆதரவாளர் முகநூலில் பின்வருமாறு எழுதினார்... முல்லைத்தீவு ரவிகரனோடு, கிளிநொச்சி சிறீயரோடு என்று. அதற்கு கிளிநொச்சியைச் சேர்ந்தவரும் முன்பு பிரதேச சபை உறுப்பினராக இருந்தவரும், இப்பொழுது சுமந்திரனின் தீவிர விசுவாசியுமான ஒருவர் பதில் எழுதினார் யாழ்ப்பாணம் சுமந்திரனோடு என்று. இது ஒரு சமூக வலைத்தளக் காட்சி.

இரண்டாவது காட்சி, தேர்தல் வெற்றிகள் பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த சுமந்திரன் தமிழரசுக் கட்சி பலவீனமடையவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக சேர்ந்து இருந்ததை விட தற்போது தனியாக பலமாக வெளிவந்திருக்கிறது என்று கூறியுள்ளார். எனினும், இது நாங்கள் சேர்ந்து இயங்க வேண்டிய நேரம் காலம் என்றும் கூறியுள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து விலகிச் சென்ற கட்சிகளை நோக்கிய மறைமுக அழைப்பு ஒன்று அதில் உண்டு. எனினும் தனது பலத்தை நிரூபித்துக் காட்டிய பின் அந்தப் பலத்தின் அடிப்படையில் தான் அந்த அழைப்பு வந்திருக்கிறது.

ஆனால் மூத்த அரசியல் செயற்பாட்டாளர் ஆகிய பஷீர் காக்கா அண்மையில் ஊடகச் சந்திப்பு ஒன்றை வைத்து அதில் தமிழரசுக் கட்சிக்குள் இருந்து சுமந்திரனை நீக்க வேண்டும் என்ற பொருள்பட கருத்துத் தெரிவித்துள்ளார்.

அதேசமயம், தேர்தல் முடிவுகளின் பின் கருத்துத் தெரிவித்த கஜேந்திரகுமார், தமிழரசுக் கட்சி 'எக்கிய ராஜ்ய' என்ற தீர்வைக் கைவிடுமாக இருந்தால் தாங்கள் அக்கட்சியோடு இணைந்து செயற்படத் தயார் என்று கூறியுள்ளார். அந்த நிபந்தனையைத் தமிழரசுக் கட்சி ஏற்கா விட்டால் உள்ளூராட்சி சபைகளை தமிழரசுக் கட்சியோடு இணைந்து நிர்வாகிப்பதற்கு முன்னணி தயாராக இல்லை என்ற பொருள் அதில் உண்டு.

மேற்கண்டவைகள் யாவும் தேர்தல் முடிவுகளுக்குப் பின்னரான தோற்றப்பாடுகளின் தொகுக்கப்பட்ட காட்சி. இதிலிருந்து நமக்குக் கிடைக்கும் தெளிவான சித்திரம் என்ன? தமிழ் மக்கள் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களித்ததைப் போலவே, உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும் ஒரு தேசமாக வாக்களித்திருக்கிறார்கள். ஆனால் கட்சிகள் தான் ஆளுக்காள் பிரிந்து நிற்கின்றன. இனிமேலும் பிரிந்து நிற்கப் போகின்றன?

தமிழரசுக் கட்சியின் வெற்றி என்பது ஒரு வகையில் சுமந்திரனின் வெற்றியும் சிறீதரனின் வெற்றியும் தான். அதாவது அது தமிழரசுக் கட்சிக்குள் ஏற்கனவே காணப்படும் பிளவைக் கூர்மையாக வெளிப்படுத்தும் ஒரு வெற்றி. அப்படியென்றால் நீதிமன்றத்தில் இருந்து கட்சியை வீட்டுக்குக் கொண்டு வரக்கூடிய வாய்ப்புகள் இப்போதைக்கு கிடையாதா? தன் கட்சிக்குள்ளேயே ஒருமைப்பாட்டை ஐக்கியத்தைப் பேண முடியாத தலைமைகள் கட்சிக்கு வெளியே தேசிய ஐக்கியத்தை எப்படிப் பேண முடியும்?

தேர்தல் வெற்றிக்குப் பின் சுமந்திரனின் ஆதரவாளர்களும் முன்னணியின் ஆதரவாளர்களும் சமூக வலைத்தளங்களில் எழுதி வரும் கருத்துக்களைத் தொகுத்துப் பார்த்தால் தேசம் தொடர்ந்தும் கட்சிகளாகப் பிரிந்து நிற்கப் போகிறது என்றே தெரிகிறது. சுமந்திரனின் விசுவாசிகள் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ். மாநகர சபையின் பிரதான வேட்பாளரும் உட்பட பல பிரதானிகள்




தங்கள் சொந்த வட்டாரங்களில் தோற்கடிக்கப்பட்டிருப்பதை ஏளனத்தோடு சுட்டிக் காட்டி வருகிறார்கள். ஆனால் சுமந்திரனுடைய தாய்க் கிராமத்திலேயே குடத்தனையில் தமிழரசுக் கட்சி ஒரு முன்னாள் இயக்கத்தவரால் தோற்கடிக்கப்பட்டிருக்கிறது என்ற விடயத்தை அவர்கள் ஏனோ மறந்து விடுகிறார்கள்.

கட்சிகளுக்கு இடையிலான, கட்சிகளுக்கு உள்ளேயான இந்த ஆழமான பிளவுகளை தனக்குச் சாதகமான ஒரு தோற்றப்பாடாக என்பிபி கருதுகின்றது. அதனால் தான் கூறுகிறது.

வடமாகாணத்தில் தனக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரத்துக்கும் அதிகமான வாக்குகள் கிடைத்தன என்று. யாழ்ப்பாணத்தில் அதுதான் இரண்டாவதாக நிற்கிறது. வவுனியாவில், மன்னாரில் முதலாவதாக நிற்கிறது. மட்டக்களப்பில் இரண்டாவதாக நிக்கிறது. வன்னியில் இரண்டாவதாக நிற்கிறது.

தமிழரசுக் கட்சிக்கு 75 வயது கொங்கிரஸ் கட்சிக்கு அதை விட அதிக வயது. இந்த இரண்டு கட்சிகளையும் தனித்தனியாக எடுத்து அவற்றோடு என்பிபியை ஒப்பிட்டுப் பார்த்தால், 6 மாதங்களில் ஒன்றுமே இல்லாமல் இருந்த ஒரு கட்சிக்கு, தென்னிலங்கை மைய கட்சிக்கு, எவ்வளவு வாக்குகள் கிடைத்திருக்கின்றன?

அதே சமயம் எல்லாத் தமிழ் தேசியக் கட்சிகளுக்கும் கிடைத்த வாக்குகளைக் கூட்டிப் பார்த்தால் என்பிபி பின் தள்ளப்பட்டு விடும். அதாவது கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் கிடைத்த அதே சித்திரம் தான் மீண்டும் கிடைத்திருக்கின்றது.

இது தான் உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகள் தமிழ் கட்சிகளுக்கு உணர்த்துபவை. இந்தச் சித்திரமே தொடர்ந்தும் காணப்படுமாக இருந்தால் உள்ளூராட்சி சபைகளை நிர்வகிப்பதில் குழப்பங்கள் ஏற்படக்கூடிய வாய்ப்புகள் அதிகம்.

கஜேந்திரகுமார் இறந்த காலத்தில் இருந்து நிறையப் படித்திருப்பதும் அந்த அடிப்படையில் நெகிழ்வாக நடந்து கொள்வதும் தமிழ்த் தேசிய ஐக்கியத்தைக் கட்டியெழுப்ப உதவும். ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டமைப்போடு அவர் உரையாடியதாகவும் அவர்களிடமிருந்து இக்கட்டுரை எழுதப்படும் நாள் வரையிலும் பதில் கிடைக்கவில்லை என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குள் உள்ள சில கட்சிகள் ஏற்கனவே பழைய கூட்டமைப்பை மீண்டும் புதுப்பிக்கும் விருப்பத்தோடு காணப்படுகின்றன. கிளிநொச்சியில் சந்திரக்குமாரை அவர்கள் உள்வாங்கியதன் மூலம் அவர்கள் தெளிவாக சுமந்திரனை நோக்கிச் சாய்ந்தார்கள். எதிர்காலத்தில் கூட்டமைப்பாக செயல்படும் உள்நோக்கம் இருந்தால் அக்கட்சி முன்னணியை நோக்கி வருவதற்கான வாய்ப்புகள் குறைவு.

எனவே உள்ளூராட்சி சபைகளில் என்பிபிக்கு எதிராக தமிழ்க் கட்சிகள் ஒரு தேசமாகத் திரளும் வாய்ப்புக்கள்



இக்கட்டுரை எழுதப்படும் நாள் வரையிலும் பிரகாசமாக இல்லை. அறுதிப் பெரும்பான்மை இல்லாத சபைகளில் நிச்சயமற்ற தலைமைத்துவம் தான் இருக்கும்.

முன்னணிக்கும் தமிழரசு கட்சிக்கும் இடையிலான பிளவு கொள்கை அடிப்படையிலானது என்று முன்னணி கூறுகிறது. ஆனால் 'எக்கிய ராஜ்ய' என்ற தீர்வு சுமந்திரனின் விருப்பமா அல்லது முழுக் கட்சியினுடையதும் நிலைப்பாடா என்ற கேள்விக்கு விடை வேண்டும்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் வெற்றிகளின் மூலம் தமிழரசுக் கட்சியின் மீதான சுமந்திரனின் பிடி முன்னரை விடப் பலமானதாகவும் இறுக்கமானதாகவும் மாறியிருப்பதனால், அவர் தனது நிலைப்பாட்டைக் கட்சியின் நிலைப்பாட்டாக மாற்றுவார் என்ற ஒரு வாதம் முன்வைக்கப்படுகிறது.

ஆனால் எக்கிய ராஜ்ய என்பது தமிழரசுக் கட்சியின் ஒட்டுமொத்த நிலைப்பாடு அல்ல. கட்சியின் பதில் தலைவர் சிவஞானமும் உட்பட கிளிநொச்சியில் பெரு வெற்றி பெற்ற சிறீதரன், வன்னியில் ரவிகரன், கிழக்கில் சாணக்கியனைத் தவிர பெரும்பாலான ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லாருமே வெளிப்படைத் தன்மை மிக்க சமஸ்டிக்குத் தான் ஆதரவாக உள்ளார்கள். ஒற்றையாட்சிப் பண்புமிக்க தீர்வுப் பொதி ஒன்றுக்கா தமிழரசு கட்சியின் ஆதரவாளர்கள் வாக்களித்தார்கள்? இல்லை. எனவே இந்த விடயத்தில் தமிழரசுக் கட்சியை சுமந்திரனின் கட்சியாகப் பார்க்க முடியாது. இது தொடர்பாக அதாவது எக்கிய ராஜ்ய தொடர்பாக தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகள் ஒரு பகிரங்க மேடையில் அமர்ந்து வெளிப்படைத் தன்மை மிக்க ஓர் உரையாடலைச் செய்ய வேண்டும்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் பரப்புரைகளின் போது கஜேந்திரகுமார் ஒரு விடயத்தைச் சுட்டிக் காட்டியிருந்தார். இது தமிழ் மக்களின் தலைவிதியைத் தீர்மானிக்கும் ஒரு தேர்தல் என்று. தமிழ் மக்கள் தமது தலைவிதியைத் தீர்மானிக்கும் ஒரு முடிவை தேர்தலில் வெளிப்படுத்தி விட்டார்கள்.

அந்த முடிவின் அடிப்படையில், பொது எதிரிக்கு எதிராக எப்படித் தேசமாகத் திரளலாம் என்று தான் சிந்திக்கலாமே தவிர மீண்டும் கட்சிகளாகச் சுருங்கவோ சிதறவோ முடியாது. அதிலும் குறிப்பாக இறந்தவர்களை நினைவு கூரும் ஒரு மாதத்தில் தமிழ் மக்கள் வழங்கிய ஆணை அது. அதற்குத் தமிழ்க் கட்சிகள் கீழ்ப்படிய வேண்டும். இல்லையென்றால் மாகாண சபை தேர்தலின் போதும் மீண்டும் இது தமிழ் மக்களின் தலைவிதியைத் தீர்மானிக்கும் ஒரு தேர்தல் என்று கூற வேண்டியிரு க்கும். ஏனென்றால் என்பிபி தமிழர் தாயகத்தில் பெரும்பாலும் இரண்டாம் இடத்தில் நிற்கிறது.

# பாரிஸில் யாழ்.பல்கலையின் பொன்விழா கொண்டாட்டம்




'கேடில் விழுச் செல்வம் கல்வி யொரு வற்குமாடல்ல மற்றை யவை'

-குறள் 400-

கல்வியைக் காட்டிலும் மேலான செல்வம் எதுவும் இல்லை என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே உலகுக்கு அறிவித்தவர்கள் நம் முன்னோர்கள். கீழடி அகழ்வாராய்ச்சியால் எழுத்துரு மூலம் கருத்துப் பரிமாற்றத்துக்கும் மூலவர் நாமே என அறிவியல் வாயிலாக அறியப்பட்டுள்ளது. கல்வி நம் வாழ்வின் உயிர்நாடி. ஈழத் தமிழரின் கல்வி வளத்தின் அதி உயர் நிலையமான யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமானது பல முற்போக்கான அறிஞர்களின் விடாமுயற்சியினால் 1974 ஆம் ஆண்டு ஐப்பசித் திங்களில் ஆரம்பிக்கப்பட்டு, இன்று ஐம்பது ஆண்டுகளைக் கடந்து நிற்கிறது.

தமிழ் மக்களுக்கான உயர் கல்வி நெருக்கடிகளை சந்தித்த போதிலும் எமது இன அடையாளங்கள் அடக்கு முறைகளுக்கு முகம் கொடுத்த நிலையிலும், தமிழ் பல்கலைக்கழகம் ஒன்றின் தேவை உணரப்பட்டு, மிகப் பெரும் சவால்களுக்கு மத்தியில் யாழ்ப்பாண பல்கலைக்கழகம் எமது பிரதேசத்தில் நிறுவப்பட்டது என்பது வரலாறு. அவ்வாறு எமக்கு கிடைத்த யாழ் பல்கலைக்கழம் தொடர்ந்தும் எமது மக்களுடன் அவர்களின் வலிகளுடன் பயணித்து வந்தது என்பதும் தொடர்ந்து வருகிறது என்பதும் நாம் எல்லோரும் பெருமைப்பட வேண்டிய ஒரு விடயம்.

ஒரு சில தனியார் பல்கலைக்கழகங்கள் தவிர்ந்த அனைத்துப் பல்கலைக்கழகங்களும் அரச நிதியினால் அதாவது மக்களது நிதிப் பங்களிப்பினால் நடாத்தப்பட்டு வருகின்றன. இலங்கையின் மக்கள் தொகையில் மிகச் சிறிய பகுதியினரே இப் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகிறார்கள். இவர்களது உயர் கல்விக்கு எல்லோரும் பங்களிப்பு வழங்குவதால், யாழ் பல்கலைக்கழகமும் மக்கள் சொத்தாகும். ஆதலால் தமிழ் மக்கள் அனைவரும் இந்த பெருமையை கொண்டாடலாம்.

இப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட வேளை இரு பீடங்களை மட்டுமே கொண்ட ஒரு வளாகமாகவே இருந்து, இன்று பதின்மூன்றுக்கும் மேலான பீடங்களைக் கொண்டு நாட்டின் முன்னணியில் உள்ள முழுமையான பல்கலைக்கழகங்களில் ஒன்றாக மிளிர்கிறது. திருநெல்வேலியில் மையம் கொண்டு மருதனார்மடம், கைதடி, கிளிநொச்சியாகக் கிளைத்து, பரந்து நீண்டு இருக்கிறது. இதன் இன்னொரு கிளையாயிருந்த வவுனியா வளாகம் இன்று தனிப் பல்கலைக் கழகமாக வளர்ந்திருக்கின்றமையும் இதற்கான சிறப்பாகக் கொள்ள முடியும். முப்பதாண்டு கால கொடும் யுத்தத்துக்கும் முகம் கொடுத்து, அதன் பலமான அடித்தளம், நம்மவரின் சலிப்பின்றிய கடின உழைப்பு ஆகியவற்றால் தொடர்ந்து வளர்ந்தபடி நிமிர்ந்து நிற்கிறது.

உயர் கல்வி நிமித்தமும் போரின் தாக்கத்தாலும் இக் கலைக்கூடப் பட்டதாரிகள் உலகெங்கும் இடம் பெயர்ந்து அந் நாடுகளில் திறமைமிக்க கல்விமான்களாக, அந் நாடுகளின் முன்னேற்றத்துக்கு துணை நிற்பது, நம் பல்கலைக்கழக கல்வித் தரத்தைப் பறை சாற்றுகிறது. உலகத் தரம் வாய்ந்த ஆய்வுகளை நிகழ்த்தக் கூடிய ஆய்வாளர்களைப் புலத்திலும் புலம் பெயர் தேசங்களிலும் தொடர்ந்து உருவாக்கிய வண்ணமிருக்கிறது. சொல்லொணா துயர்களைக் கடந்த நம் மக்களுக்கும் மட்டுமின்றி நம் பல்கலைக் கழகத்துக்கும் நேரடியாகவோ மறைமுகமாகவோ புலம் பெயர் சமூகம் ஒரு வளாகமாக இருப்பது கண்கூடு. எனவே புலம் பெயர் சமூகத்தால் பொன்விழா கொண்டாடப்படுவதும் கருத்தானதே.

சாதாரண பல்கலைக்கழகங்கள் போலன்றி யாழ் பல்கலைக்கழகமானது தாங்கொணா பேரிடர் களுக்கு முகம் கொடுத்தபடி எம்மவரைத் தாங்கி நிற்கின்றது. அதன் ஐம்பதாண்டு கால இருப்பென்பது பல நூற்றாண்டுகள் கடந்த பயணத்துக்கு இணையாகும்.

எதிர்வரும் யூன் மாதம் எட்டாம் திகதி, பரிஸ் இன் புற நகர் பகுதியான Villeneuve Saint- Georges எனும் இடத்தில் உள்ள Space Shine மண்டபத்தில் இந்த நிகழ்வு நடைபெறுகிறது.

ஐரோப்பாவின் பல்வேறு நகரங்களிலும் பரந்து பட்டு வாழும் பல பீடங்களையும் சார்ந்த பழைய மாணவர் ஒன்று கூடும் ஒரு வரலாற்று நிகழ்வாக, இந்த பொன் விழா இருக்கும் என, ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளார்.

யாழ் பல்கலைக்கழகத்தினதும், வடக்கு கிழக்கு பிரதேச வளர்ச்சிக்கும் பல முயற்சிகளை செய்து வரும் டுஐகுவு ஆய்வு அறக்கட்டளை அமைப்பின் அனுசரணையுடன், பிரான்ஸ் இல் வாழும் யாழ் பல்கலைக்கழக பழைய மாணவர்கள் இந்த நிகழ்வை ஒழுங்கு செய்து உள்ளார்கள். எமது கலாச் சாரத்தை பிரதிபலிக்கும் இசை, நடன நிகழ்ச்சிகள், இராமநாதன் நுண்கலை பீடத்தின் பழைய மாணவர்களால் ஒழுங்கு படுத்தப்படுகின்றன.




இந்த நிகழ்வு பற்றிய தகவல்களை அறிந்து கொள்ள 33 7 53 50 93 96 என்ற இலக்கத்துடன் WhatsApp மூலமாக அல்லது uojfrance@gmail.com என்ற முகவரிக்கு மின்னஞ்சல் மூலமாக தொடர்பு கொள்ளலாம்.

Balachandran Law Office
Balachandran Muthaiah
Barrister, Solicitor & Notary
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544


# உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்குப் பின்னரான சிந்தனைகள்!




எதிர்பாக்கப்பட்டதைப் போலவே உள்ளூராட்சி சபைகளில் தமிழரசுக் கட்சி ஒப்பீட்டளவில் அதிக ஆசனங்களைப் பெற்றிருக்கின்றது. அறுதிப் பெரும்பான்மை இல்லாத சபைகளில், தமிழ்த் தேசியக் கட்சிகள் தங்களுக்கிடையே இணங்கிச் செயற்படத் தயாராக இருந்தால் சபைகளை வெற்றிகரமாக நிர்வகிக்க முடியும். எனவே தேர்தலுக்குப் பின்னரான தமிழ்த் தேசிய அரசியல் சூழலில் கட்சிகள் பின்வரும் முடிவுகளை எடுக்க வேண்டியிருக்கும்.

உள்ளூராட்சி சபைகள் உள்ளூர் நிலைமைகளுக்கானவை என்ற போதிலும் அவை தேசத்தைக் கட்டியெழுப்பும் அரசியல் வழியில் அடிப்படையானவை. கீழிருந்து மேல் நோக்கித்தான் தேசத்தைக் கட்டியெழுப்பலாம். அந்த அடிப்படையில் தேசத்தைக் கட்டி எழுப்புவது என்பது உள்ளூராட்சி சபைகளில் இருந்து தொடங்குகின்றது. எனவே முதலாவதாக, தேசத்தைக் கட்டி எழுப்புவது என்ற அடிப்படையில் உள்ளூராட்சி சபைகளை எப்படிக் கட்டியெழுப்புவது என்று முடிவெடுக்க வேண்டும்.

இப்போதுள்ள நிலைமைகளின்படி தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகள் பொதுவான ஐக்கியத்திற்கு உடன்படப் போவதில்லை. எனினும் குறைந்த பட்சம் தமிழ்த்தேசிய நிலைப்பாட்டுக்கு வெளியே உள்ளூர் அதிகாரம் செல்வதைத் தடுப்பது என்ற அடிப்படையிலாது அவர்கள் தந்திரோபாயமாக ஒன்றிணைலாம். அதே போல தேசத்தைக் கட்டியெழுப்பும் நோக்கு நிலையிலிருந்து தான் உள்ளூர் அதிகாரத்தைக் கையாள வேண்டும் என்ற விடயத்திலும் ஒரு புரிந்துணர்வுக்கு வரலாம்.

அப்படி ஒரு புரிந்துணர்வு ஏற்படுமாக இருந்தால், உள்ளூராட்சி சபைகளை இரண்டு தளங்களில் கட்டி எழுப்ப வேண்டியிருக்கும். முதலாவதாக, உள்ளூர்த் தலைமைகளைக் கட்டி எழுப்புவது. இரண்டாவதாக, உள்ளூர் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவது.

உள்ளூர்த் தலைமைகளையும் உள்ளூர் பொருளாதாரத்தையும் அவற்றுக்கேயான தனித்துவங்களோடு கட்டி எழுப்பும் அதே சமயம் அவை தேசத்தைக் கட்டி எழுப்பும் பரந்தகன்ற நிகழ்ச்சி நிரலில் ஒரு பகுதியாக அமைவதை உறுதிப்படுத்த வேண்டும்.

முதலாவதாக, உள்ளூர்த் தலைமைகளை எப்படிக் கட்டி எழுப்புவது? கிராமங்கள் தான் தேசத்தின் இதயம். அதேசமயம் கிராமங்களில் தான் அதிகம் முரண்பாடுகளும் அசமத்துவங்களும் அதிகம். தமிழ்க் கிராமங்களில் சாதி சமய பால் முரண்பாடுகளும் அசமத்துவங்களும் அதிகம். உள்ளூராட்சி சபைகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட பலரும் சாதி அடிப்படையில் அல்லது சமய அடிப்படையில் அல்லது உள்ளூர் செல்வாக்கின் அடிப்படையில் தான் தெரிவு செய்யப்பட்டு இருப்பார்கள். அவர்களில் பலர் சாதி உணர்வுகளுக்கும் சமய உணர்வுகளுக்கும் உட்பட்டவர்களாக இருப்பர். பால் சமத்துவம் தொடர்பில் விழிப்பில்லாதவர்களாக இருப்பர். எனவே தமிழ்த் தேசிய நோக்கு நிலையில் இருந்து அவர்களை வார்த்தெடுக்க வேண்டும்.

சாதிவாதி தேசியவாதியாக இருக்க முடியாது. மதவெறியர் தேசிய வாதியாக இருக்க முடியாது. ஆண் மேலாதிக்கவாதி அல்லது பாலியல் குற்றச்சாட்டுகளுக்கு இலக்கானவர், உள்ளூர்த் தலைவராக இருக்க முடியாது. தேசியவாதியாகவும் இருக்க முடியாது. எனவே உள்ளூர்த் தலைவர்களிடம் தேசியப் பண்புகளை எப்படி வளர்த்தெடுப்பது என்று சிந்திக்க வேண்டும். அங்கிருந்து தொடங்கினால் தான் மாவட்ட மட்டத்திலும் மாகாண மட்டத்திலும் முடிவில் தாயக மட்டத்திலும் தேசியப் பண்புமிக்க தலைமைகளைக் கட்டி எழுப்பலாம். கீழிருந்து மேல் நோக்கி. இது முதலாவது.

இரண்டாவதாக, தேசியப் பொருளாதாரத்தின் ஒரு பகுதியாக உள்ளூர் பொருளாதாரத்தை எப்படிக் கட்டியெழுப்புவது?

ஒவ்வொரு உள்ளூராட்சி சபையும் அதன் எல்லைக்குட்பட்டு பொருத்தமான பொருளாதாரத் திட்டங்களை வகுக்க வேண்டும். அது தமிழ்த் தேசியப் பொருளாதாரத்தின் பிரிக்கப்படுவியலாத பகுதியாகவும் இருக்க வேண்டும். அதாவது தேசத்தைக் கட்டி எழுப்புவதன் ஒரு பகுதியாக கிராமங்களைக் கட்டி எழுப்புவது. மறுவளமாகச் சொன்னால், தேசத்தைக் கட்டி எழுப்பும் நிகழ்ச்சித் திட்டத்தை கிராமங்களைக் கட்டி எழுப்புவதில் இருந்தே தொடங்க வேண்டும். இந்த அடிப்படையில் ஒவ்வொரு உள்ளூராட்சி சபையும் அதற்கேயான தனித்துவம் மிக்க பொருளாதாரத் தரிசனத்தைக் கொண்டிருக்க வேண்டும்.

உள்ளூர் அதிகார சபை என்று அது அழைக்கப்பட்டாலும் அதற்குள்ள அதிகாரங்கள் வரையறைக்குட்பட்டவை. தையிட்டி விகாரை ஆகப் பிந்திய உதாரணம். எனினும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு இருக்கக் கூடிய கொஞ்ச நஞ்ச அதிகாரங்களைப் பயன்படுத்தி புலம்பெயர்ந்த தமிழர்களின் முதலீடுகளையும் இணைத்துக் கொண்டு எப்படிக் குறிப்பிட்ட உள்ளூராட்சி சபைப் பிரதேசத்தின் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவது என்று திட்டமிட வேண்டும்.

பொதுவாகச் சொல்லுவார்கள், உள்ளூராட்சி சபைகள் பிரசவத்தில் இருந்து மரணம் வரையிலும் உள்ளூர் நிலைமைகளின் மீது தலையிடக் கூடிய அதிகாரங்களைக் கொண்டிருக்கின்றன என்று. நடைமுறையில் அந்த அதிகாரங்கள் போதாமல் இருக்கலாம். ஆனால் உள்ளூர் நிலைமைகளுக்கு ஏற்ப உள்ளூர்ப் பொருளாதாரத்தைத் தமிழ்த் தேசியப் பொருளாதாரத்தின் ஒரு பகுதியாகக் கட்டி எழுப்புவதற்கு வேண்டிய தீர்க்க தரிசனம் மிக்க திட்டமிடல்கள் வேண்டும்.

தேர்தல் பிரச்சாரங்களின் போது அரசுத் தலைவர் அனுர கூறியதாகக் கூறப்படும் ஒரு விடயம் அதிகம் சர்ச்சைக்கு உள்ளாகியது. தேசிய மக்கள் சக்தி வெற்றி பெறும் சபைகளுக்கு நாங்கள் கண்ணை மூடிக் கொண்டு நிதிகளை வழங்குவோம் என்ற பொருள்பட அவர் கூறியதாகத் தகவல்கள் தெரிவித்தன. அரசு தரப்பு அதை மறுத்திருந்தது. ஆனால் அரசுத் தலைவர் பேசும் ஒரு கூட்டத்தில் அவருடைய பேச்சின் மொழி பெயர்ப்பை அப்படித்தான் விளங்கிக் கொள்ளக் கூடியதாக இருந்தது. அதாவது ஆளுங்கட்சியின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற பிரதேச சபைகளுக்குத் தான் அவர்கள் நிதியைத் தடையின்றி வழங்குவார்கள் என்று பொருள் கொள்ளத்தக்க ஒரு பேச்சு. எனவே அரசாங்கம் நிதியை வழங்குமோ இல்லையோ, புலம்பெயர்ந்த தமிழர்களின் நிதி உதவிகளை உள்ளூர் கள நிலைமைகளுக்கு ஏற்ப எப்படிப் பெற்றுக் கொள்வது? உள்ளூரில் இருக்கக் கூடிய வளங்களை எப்படி உச்சமாகப் பயன்படுத்துவது?

புலம் பெயர்ந்த தமிழர்களின் உதவிகளை எப்படிப் பெற்றுக் கொள்வது என்ற விடயத்தில் புதிய தரிசனங்கள், புதிய திட்டமிடல்கள் வேண்டும். பெரும்பாலான தமிழ்க் கிராமங்களில் யாரோ ஒருவர் அல்லது பல புலம் பெயர்ந்த தமிழர்கள் பல்வேறு வழிகளிலும் உதவிகளைச் செய்து வருகிறார்கள். புலம் பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் உள்ள அமைப்புகள், தொண்டு நிறுவனங்கள், தனிநபர்கள் இவ்வாறு உதவிகளைச் செய்து வருகின்றார்கள். இந்த உதவிகளை உள்ளூராட்சி சபைகள் பொருத்தமான விதங்களில் ஒருங்கிணைக்கலாம்.

அடுத்தது முக்கியமாக எப்படிப்பட்ட திட்டங்களை வகுத்தாலும் அந்தத் திட்டங்கள் முதலாவதாகவும் முக்கியமானதாகவும் பசுமைத் திட்டங்கள் ஆக இருக்க வேண்டும். மிகக் குறிப்பாக சமூகப் பங்களிப்புடன் கூடிய பசுமைத் திட்டங்கள் ஆக இருக்க வேண்டும். சுற்றுச்சூழல் பாதுகாப்பை அடிப்படையாகக் கொண்டு கிராமத்தை ஒரு பசுமை பூங்காவாக மாற்றக்கூடிய பொருளாதாரத் தரிசனங்களைக் கொண்டவர்களின் ஆலோசனைகளைப் பெற்று உள்ளூராட்சி சபைகளுக்கான தனித்துவமிக்க பொருளாதாரத் திட்டங்களை வகுக்க வேண்டும்.

எனது நண்பர் ஒருவர் யாழ்ப்பாணத்தின் வலிகாமம் பகுதியில் மருத்துவ அதிகாரியாக இருந்தவர். அவர் ஓர் சமூக அரசியல் செயல்பாட்டாளரும் கூட. தன்னுடைய துறைக்கு வெளியே சென்று, ஆயிரக்கணக்கான மரங்களை நடுவித்திருக்கிறார். அதை விட முக்கியமாக, காரைநகர்ப் பகுதியில் நாலுக்கும் மேற்பட்ட குளங்களை அவர் புனரமைத்தார். குளங்களை நோக்கிச் செல்லும் நீரோடும் வாய்க்கால்களைப் புனரமைத்தார். இரண்டு புதிய குளக் கட்டுகளையும் அவர் கட்டியிருக்கிறார். இத்தனைக்கும் அது அவருடைய மருத்துவ நிர்வாகச் செய்முறைக்கு அப்பாற்பட்ட விடயம். அவர் தன்னார்வமாக அந்தப் பசுமைத் திட்டங்களை முன்னெடுத்தார். அவர் ஒரு முன்னுதாரணம்.

இந்தியாவில் இது போன்று பல முன்னுதாரணம் மிக்க மனிதர்களைக் கிராமங்கள் தோறும் காண முடியும். தமது சொந்தச் செலவில் பாலத்தை கட்டியவர்கள், தமது சொந்த உழைப்பினால் சிறு காடுகளை உருவாக்கியவர்கள், தமது சொந்த உழைப்பினால் குளங்களைத் தூர் வாரியவர்கள், வாய்க்கால்களைப் புதுப்பித்தவர்கள்.... என்று பலரைப் பற்றி சமூக வலைத்தளங்களில் பார்க்கின்றோம். அவ்வாறான தன்னார்வமாக இயங்குகின்ற உன்னதமான சமூகத் தொண்டர்களை உள்ளூராட்சி சபைகள் ஒருங்கிணைக்க வேண்டும். அவர்களுக்கு உரிய அங்கீகாரத்தையும் கௌரவத்தையும் பலத்தையும் போதிய வளங்களையும் கொடுத்து அவர்களை ஒருங்கிணைக்க வேண்டும். அதாவது யார் முதலில் பசுமைக் கிராமங்களைக் கட்டியெழுப்பப் போகிறார்கள் என்ற போட்டிதான் இருக்க வேண்டும்.

மாறாக எந்தக் கட்சியைக் கட்டியெழுப்புவது? எந்தத் தலைவருக்கு விசுவாசிகளை, வாலாட்டிகளைக் கட்டியெழுப்புவது? என்ற போட்டி இருக்கக்கூடாது.

**நிலாந்தன்**

## முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வில் சுற்றுலாப் பயணிகள்!



முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் செயற்பாடு வடக்கு, கிழக்கு உள்ளிட்ட தமிழர்கள் வாழும் பகுதிகளில் உணர்பூர்வமாக இடம் பெற்று வரும் நிலையில் மட்டக்களப்பு கிறிஸ்தவ ஒன்றியத்தின் ஏற்பாட்டில் 16 மே 2025 காலை மட்டக்களப்பு நகரில் நடைபெற்றது. இதன்போது வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் முள்ளிவாய்க்கால் கஞ்சி தொடர்பில் ஏற்பாட்டாளர்களிடமிருந்து கேட்டறிந்து கொண்ட அதே வேளைகஞ்சியையும் பெற்று பருகி சென்றது அனைவரினதும் கவனத்தை பெற்றிருந்தது.

# தமிழ்கட்சிகளுக்குக் கிடைத்த வாக்குகள் பயனற்றுப் போன அரசியல் பாதையில் மீண்டும் செல்வதற்கான அங்கீகாரம் அல்ல

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கடந்த ஆறு மாதகால செயற்பாடுகள் மீதான தேசிய அளவிலான ஒரு வாக்கெடுப்பாக நோக்கப்பட்ட உள்ளூராட்சி தேர்தல்களின் முடிவுகள் ஜனாதிபதி அநுரா குமார திசாநாயக்கவின் நிருவாகம் மக்களின் ஆதரவை இழக்கத் தொடங்கி விட்டது என்பதை தெளிவாக வெளிக்காட்டியிருக்கிறது.

ஏழு மாத கால இடைவெளியில் தொடர்ச்சியாக மூன்று தேர்தல்களில் வெற்றியைப் பெற்றிருக்கும் தேசிய மக்கள் சக்தி 339 உள்ளூராட்சி சபைகளில் 265 சபைகளில் கூடுதலான



ஆசனங்களைக் கைப்பற்றிய தனியான பெரிய அரசியல் கட்சியாக விளங்குகிறது. ஆனால், அதன் வாக்குகள் கடுமையான அளவுக்கு வீழ்ச்சிகாணத் தொடங்கியிருக்கிறது.

கடந்த வருடம் செப்டெம்பர் மாதம் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் திசாநாயக்க 41.31 சதவீதமான வாக்குகளைப் பெற்றார். இரு மாதங்களுக்கு பிறகு நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் தேசிய மக்கள் சக்தி 61.56 சதவீதமான வாக்குகளைப் பெற்று மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கும் அதிகமான (159) ஆசனங்களைக் கைப்பற்றி சாதனை படைத்தது. ஆனால், ஆறு மாதகால இடைவெளியில் கடந்த வாரத்தைய உள்ளூராட்சி தேர்தல்களில் அதன் வாக்குகளில் 18 சதவீத வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது.

பாரம்பரியமான அதிகார வர்க்க அரசியல் கட்சிகளை எல்லாம் நிராகரித்த மக்கள் பாரிய எதிர்பார்ப்புகளுடனும் பிரமாண்டமான ஆதரவுடனும் முதல் தடவையாக பதவிக்கு கொண்டு வந்த ஒரு இடதுசாரிக் கட்சியின் அரசாங்கத்தைப் பொறுத்தவரை, இந்த செல்வாக்கு வீழ்ச்சி பெரியதொரு பின்னடைவாகும். உள்ளூராட்சி தேர்தல் முடிவுகளை பற்றி அரசாங்கத் தலைவர்கள் என்னதான் விளக்கங்களைக் கூறினாலும், யதார்த்த நிலைவரத்தை அவர்கள் புரிந்து கொள்ளாமல் இருக்க முடியாது.

எதிர் பார்க்கப்பட்டதை போன்று வாக்களிப்பதில் மக்களின் ஆர்வமும் கணிசமானளவுக்கு குறைந்திருக்கிறது. ஜனாதிபதி தேர்தலில் 79.46 சதவீதமாகவும் பாராளுமன்ற தேர்தலில் 68.93 சதவீதமாகவும் இருந்த வாக்களிப்பு உள்ளூராட்சி தேர்தல்களில் 55 சத வீதத்துக்கும் 60 சதவீதத்துக்கும் இடைப்பட்டதாகவே இருந்தது. பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி பெற்ற வாக்குகளையும் விட இரண்டு மடங்கிற்கும் அதிகமான வாக்குகளை ஆளும் கட்சி பெற்றிருக்கின்ற போதிலும், எதிரணி கட்சிகளின் வாக்குகளில் ஒரு அதிகரிப்பை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

பாராளுமன்ற தேர்தலில் 17.66 சதவீதமான வாக்குகளைப் பெற்ற ஐக்கிய மக்கள் சக்தி இந்த தடவை 21.69 சதவீதமான வாக்குகளுடன் 14 உள்ளூராட்சி சபைகளை கைப்பற்றியிருக்கிறது. பாராளுமன்ற தேர்தலில் வெறுமனே 3.14 சதவீதமான வாக்குகளைப் பெற்ற ராஜபக்சாக்களின் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மொத்த வாக்குகளில் 9.17 சதவீதமான வாக்குகளை பெற்றிருக்கிறது. முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சியும் கூட அதன் வாக்குகளில் ஏற்பட்ட சொற்ப அதிகரிப்பு குறித்து ஒருவித திருப்தியை வெளிப்படுத்தியிருக்கிறது.

தேசிய மக்கள் சக்தி 265 உள்ளூராட்சி சபைகளில் வெற்றியைப் பெற்றிருக்கின்ற போதிலும், 117 சபைகளில் பெரும்பான்மை உறுப்புரிமையைக் கொண்டிருக்கவில்லை. 120 சபைகளிலேயே எந்த பிரச்சினையும் இல்லாமல் அவர்களினால் நிருவாகத்தை அமைக்கக்கூடியதாக அறுதிப் பெரும்பான்மை கிடைத்திருக்கின்ற அதேவேளை, 30 சபைகளில் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களின் எண்ணிக்கையும் எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்களின் எண்ணிக்கையும் சமமானதாக இருக்கிறது. 117 உறுப்பினர்களைக் கொண்ட கொழும்பு மாநகரசபையில் ஆளும் கட்சியினால் 48 ஆசனங்களை மாத்திரமே கைப்பற்றக் கூடியதாக இருந்தது.

உள்ளூராட்சி தேர்தல்களில் மகத்தான வெற்றியைப் பெறுவதற்காக தேசிய மக்கள் சக்தி அதன் அதிகாரத்துக்கு உட்பட்ட சகலதையும் செய்தது. ஜனாதிபதி திசாநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் அமைச்சர்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உட்பட நாடு பூராகவும் தீவிரமான பிரசாரங்களை மேற்கொண்டார்கள். எதிர்க்கட்சிகளின் கட்டுப்பாட்டுக்குள் வரக்கூடிய உள்ளூராட்சி சபைகளுக்கு நிதியை ஒதுக்குவது தொடர்பில் ஜனாதிபதி ஒரு எச்சரிக்கையையும் கூட மறைமுகமாக விடுத்தார்.

எதிர்க்கட்சிகளின் பிரசாரங்கள் மிகவும் உற்சாகம் குன்றியவையாகவே காணப்பட்டன. தேர்தல்கால வாக்குறுதிகளை அரசாங்கம் நிறைவேற்றவில்லை என்ற குற்றச்சாட்டை முன்வைப்பதை தவிர, எதிர்க்கட்சிகளினால் மக்கள் முன்னிலையில் உருப்படியான ஒரு செயற்திட்டத்தையும் முன்வைக்க முடியவில்லை. இழந்த செல்வாக்கை மீளப்பெறுவதற்கு அந்த கட்சிகள் பிரயத்தனங்களை செய்கின்ற போதிலும், தீர்க்கமான மீள்வருகை குறித்து அவை தற்போதைக்கு நினைத்துப் பார்க்க முடியாது.

அதேவேளை, தேசிய மக்கள் சக்தியும் அதன் செல்வாக்கு குறைந்து வருகின்றது என்ற யதார்த்தத்தை ஏற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது. தங்களது எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ற முறையில் அரசாங்கத்தின் செயற்பாடுகள் அமையவில்லை என்பதை மக்கள் உணரத் தொடங்கி விட்டார்கள் என்பதை ஜனாதிபதியும் அரசாங்க தலைவர்களும் இனி மேலாவது விளங்கிக்கொள்ள வேண்டும். வெறுமனே புதிய அரசியல் கலாசாரம் மற்றும் முறைமை மாற்றம் பற்றிய வார்த்தை ஜாலங்களை விடுத்து பயனுறுதியுடைய செயற்பாடுகளில் அரசாங்கம் முன்னேற்றத்தை காண்பிக்க வேண்டும்.

இது இவ்வாறிருக்க, பெருவாரியான உள்ளூராட்சி சபைகளில் நிருவாகங்களை தனியாக அதன் சொந்தத்தில் அமைப்பதில் தேசிய மக்கள் சக்தி பிரச்சினைகளை எதிர் நோக்குகின்ற போதிலும், மக்களால் நிராகரிக்கப்பட்ட கட்சிகளுடன் இணைந்து செயற்படப் போவதில்லை என்று ஜனதா விமுக்தி பெரமுனவின் (ஜே.வி.பி.) பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா அறிவித்திருக்கிறார். முன்னைய அரசாங்கங்களின் காலத்தில் இடம் பெற்றதைப் போன்று மற்றைய கட்சிகளின் உறுப்பினர்களுக்கு பணத்தையும் பதவிகளையும் தருவதாக ஆசை காட்டும் கைங்கரியங்களில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இறங்காது என்று எதிர்பார்க்கலாம். ஆனால், தங்களுடன் சேர்ந்து பணியாற்ற விரும்பும் சுயேச்சைக் குழுக்கள் மற்றும் தனிநபர்களின் ஆதரவுடன் நிருவாகங்களை அமைப்பது குறித்து பரிசீலிக்கத் தயாராக இருப்பதாக சில்வா கூறியிருக்கிறார்.

பெரும்பான்மை ஆசனங்களைக் கைப்பற்றிய கட்சியை உள்ளூராட்சி நிருவாகங்களை அமைக்க அனுமதிக்க வேண்டும் என்பதும் மக்களால் நிராகரிக்கப்பட்ட கட்சிகள் பெற்ற வாக்குகள் எல்லாவற்றையும் கூட்டிப் பார்த்து அதை மக்களின் ஆணையாக வியாக்கியானம் செய்ய முடியாது என்பதும் அவரது வாதமாக இருக்கிறது. ஆனால், ஆளும் கட்சியுடன் மோதுவதற்கு தங்களுக்கு கிடைத்திருக்கும் இந்த வாய்ப்பை எதிரணி கட்சிகள் கைநழுவவிடப் போவதில்லை. எதிர்க்கட்சிகளுக்கு பெரும்பான்மை உறுப்புரிமை கிடைத்திருக்கும் உள்ளூராட்சி சபைகளில் நிருவாகத்தை அமைப்பதற்காக இணைந்து செயற்படத் தயாராக இருப்பதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச அறிவித்திருக்கிறார். கூட்டாக நிருவாகங்களை அமைப்பதற்கு ஒத்துழைப்பது குறித்து ஆராய விரும்புவதாக ஐக்கிய தேசிய கட்சியுமும் அறிவித்திருக்கிறது.

எதிர்க்கட்சிகள் குறிப்பாக பிரேமதாசவின் ஐக்கிய மக்கள் சக்தியும் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசிய கட்சியும் எந்தளவுக்கு ஒத்துழைத்துச் செயற்பட முன்வரும் என்பதை அவை கொழும்பு மாநகரசபை விவகாரத்தை கையாள்வதில் கடைப்பிடிக்கக் கூடிய அணுகுமுறையின் மூலம் விரைவில் அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும். ஜீன் 2 ஆம் திகதிக்கு முன்னரான வாரங்களில் சில சுவாரஸ்யமான அரசியல் நிகழ்வுப் போக்குகளை காணக்கூடியதாக இருக்கும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பொறுத்தவரை, குறிப்பாக தமிழ்ப் பிரதேசங்களில் உள்ளூராட்சி தேர்தல்கள் இந்தத் தடவை வித்தியாசமான ஒரு பரிமாணத்தை எடுத்தது. இலங்கையின் தேர்தல் வரலாற்றில் முன்னென்றும் இல்லாத வகையில் கடந்த பாராளுமன்ற தேர்தலில் இரு மாகாணங்களிலும் தேசிய மக்கள் சக்தி தமிழ் மக்களின் ஆதரவைப் பெற்று கூடுதலான ஆசனங்களைக் கைப்பற்றியதே அதற்கு காரணமாகும். குறிப்பாக, இலங்கை தமிழ்த் தேசியவாத அரசியலின் கோட்டையாக கருதப்படும் யாழ்ப்பாணத்தில் ஆறு பாராளுமன்ற ஆசனங்களில் மூன்று ஆசனங்களை தேசிய மக்கள் சக்தி கைப்பற்றியது.

தமிழ் அரசியல் கட்சிகளின் எதிர்காலம் குறித்து கேள்விகள் கிளம்பின. தமிழ் மக்கள் பாராளுமன்ற தேர்தலில் தங்களுக்கு பாடத்தைப் புகட்ட விரும்பினார்கள் என்பதை தமிழ் அரசியல்வாதிகள் ஒத்துக் கொண்டார்கள். அதனால், உள்ளூராட்சி தேர்தல்களில் சகல தமிழ்க்கட்சிகளுமே தேசிய மக்கள் சக்தியை 'பொது அரசியல் எதிரியாக' கருதி அதற்கு எதிராக தீவிர பிரசாரங்களை முன்னெடுத்தன. ஐக்கிய தேசிய கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன போன்ற முன்னைய ஆளும் கட்சிகளுக்கு எந்த விதத்திலும் குறைவில்லாத அளவுக்கு தேசிய மக்கள் சக்தியும் ஒரு சிங்கள இனவாத சக்தியே என்று தமிழ் அரசியல்வாதிகள் தமிழ் மக்களுக்கு கூறினார்கள்.

தமிழ்த் தேசியவாதத்தின் இருப்பை உறுதி செய்யவும் தேசியவாத உணர்வை தமிழ் மக்கள் இழந்துவிடவில்லை என்பதை நிரூபிக்கவும் உள்ளூராட்சி தேர்தல்களில் தமிழ் மக்கள் தங்களுக்கே வாக்களிக்க வேண்டும் என்று தமிழ்க்கட்சிகள் கேட்டுக்கொண்டன. மக்களும் அந்த கட்சிகளுக்கே அதிகப் பெரும்பான்மையாக வாகளித்தார்கள்.

உள்நாட்டுப் போரின் முடிவுக்கு பின்னரான கடந்த 16 வருடங்களில் தமிழ்க்கட்சிகளின் அணுகுமுறைகள் மற்றும் செயற்பாடுகள் மீதான வெறுப்பு காரணமாக பாராளுமன்ற தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு கணிசமானளவில் வாக்களித்த தமிழ் மக்கள் தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு உட்பட தங்களது பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக அரசாங்கம் வெளிக்காட்டிய அலட்சிய மனோபாவம் காரணமாக மீணடும் தமிழ்க் கட்சிகள் பக்கமாக திரண்டு வந்திருக்கிறார்கள்.

ஆனால் வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் தேசிய மக்கள் சக்தியை முற்றாக ஓரங்கட்டிவிட்டார்கள் என்று கூறமுடியாது. ஆளும் கட்சியும் தமிழ்ப்பகுதிகளில் கணிசமான உள்ளூராட்சி ஆசனங்களை கைப்பற்றியிருக்கிறது. இரு மாகாணங்களிலும் எட்டு மாவட்டங்களிலும் ஆளும் கட்சிக்கு 376 ஆசனங்கள் கிடைத்த அதேவேளை, பிரதான தமிழ் அணிகளான இலங்கை தமிழரசு கட்சி, ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி மற்றும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் ஆகியவை மொத்தமாக 568 ஆசனங்களை கைப்பற்றியிருக்கின்றன.

குறிப்பாக, யாழ்ப்பாண மாவட்டத்தில் தமிழரசு கட்சிக்கு அடுத்ததாக இரண்டாவது இடத்துக்கு தேசிய மக்கள் சக்தி வந்திருக்கிறது. தமிழரசு கட்சிக்கு 135 ஆசனங்களும் தேசிய மக்கள் சக்திக்கு 81 ஆசனங்களும் தமிழ் காங்கிரஸுக்கு 79 ஆசனங்களும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணிக்கு 46 ஆசனங்களும் கிடைத்திருக்கின்றன.

தமிழ் கட்சிகள் பாராளுமன்ற தேர்தலில் இழந்த செல்வாக்கை உள்ளூராட்சி தேர்தல்களில் கணிசமானளவுக்கு மீட்டெடுக்கக்கூடியதாக இருந்திருக்கிறது. ஆனால் வடக்கு தமிழ் மக்கள் தமிழ்க்கட்சிகளை முழுமையாக அரவணைத்திருக்கிறார்கள் என்று கூற முடியாது. இந்த தேர்தல் முடிவுகளினால் உத்வேகம் அடைந்திருக்கும் சில தமிழ்க்கட்சிகள் தமிழ்த் தேசியவாதத்தை கூடுதலான அளவுக்கு' (22ம் பக்கம் பார்க்க)

# கொட்டாஞ்சேனை மாணவியும் பிந்திய நீதியும்

ஆனையிறவு உப்பில் சுறணை வந்தது போல் சொன்னதை செய்யுங்கள்.

சில தமிழ் பண்டிதர்கள் தமிழில் பாண்டித்தியம் பெற்றவர்கள் என நினைத்திருந்தேன். ஆனால் ஹீரோயிசத்தை ஆராதிப்பதை தவிர, அரசியல் புரியவில்லை, குறிப்பாக தமிழும் புரியுதில்லை என்பது தான் துர்ப்பாக்கியம். சரி அவர்கள் அப்படியே இருக்கட்டும்.

என்னுடன் உரையாடிய நண்பர் ஒருவர் சொன்னர் இவங்களை ஒருவரும் அனுப்பத் தேவையில்லை தாங்களாகவே போய் விடுவாங்கள் போல இருக்கு என்று (அநுர குறித்து ஒரு மென்போக்கு அவரிடமும் உண்டு)

நாடு அநுரவோடு இருக்க வேண்டும் வடக்கு கிழக்கு மலையகம் ஊரோடு இருக்க வேண்டும் என நினைப்பவன் நான் என்று தெரிந்தே அவர் என்னிடம் இதனை வலியுறுத்தினார்.





இன்னுமொரு நண்பர் சொன்னார் இப்பவும் நீங்கள் அந்த நிலைப் பாடோடு தான் இருக்கிறியல் போல கிடக்கு, கவனம் உங்களை அவங்கட ஆட்கள் என்று சீல்குத்திப் போடுவாங்கள் என்று.

வெளிப் பார்வை எப்படி இருந்தாலும் அது பற்றிய கவலை என்னிடம் இல்லை. உண்மை எது என்பதனை எனது கடந்தகாலம் கூறும்.

காரணம் தமிழ் சிங்களம் என வேறுபாடு இல்லாமல் அதிகாரத்தை அவ்வப் போது கையில் எடுத்த அனைத்து தரப்பினாலும், நான் உடலளவிலும் மனதளவிலும் கடுமையாக பாதிக்கப் பட்டு இருக்கிறேன்.

சரி விடயத்திற்கு வருவோம். கொட்டாஞ்சேனை மாணவியின் மரணம் குறித்து அண்மைய நாட்களாக பாரிய போராட்டங்கள், சர்ச்சைகள், சமூக வலைத்தள விவாதங்கள் தொடர்கிறது.

நாடாளுமன்றிலும் இது குறித்த விவாதங்கள் கடுமையாக இடம் பெற்றன. இதில் ஆளும் அரசாங்கம் என்ற அடிப்படையில், ஜனாதிபதியும், பிரதமரும், மகளீர்விவகார அமைச்சரும் ஆளும்தரப்பினரதும் பொறுப்புக் கூறல் கேள்விக்கு உட்படுத்தப்பட்டு இருக்கிறது.

பாதிக்கப்பட்டவர்கள் சிறுவர் — மகளீர் அதிகார சபையில் தமது முறைப் பாட்டை முறைப்படி பதிவுசெய்ய வில்லை. காவற்துறையில் முறையிட வில்லை, பாதிக்கப்பட்ட மாணவி வைத்தியரிடம் மனநல சிகிச்சை பெற்றிருக்கிறார் என கூறுவது ஆட்சியாளரின் பொறுப்பற்ற செயற்பாடாகும்.

தற்கொலை செய்து கொண்ட மாணவி ஏன் மனநலம் பாதிக்கப்பட்டு இருந்தார் (மனநல பாதிப்பு அல்ல மன அழுத்தத்திற்கு உட்பட்டிருந்தார்) ஏன் தற்கொலை செய்துகொண்டார்? தற்கொலைக்கு தூண்டியவர் யார்?

என்ற விடயங்கள் வெளி வந்தவுடனேயே அது குறித்து கல்வி அமைச்சும், மகளீர் விவகார அமைச்சும், சிறுவர் பாதுகாப்புச் சபையும், சட்டத் துறை நீதித் துறை என்பனவும் தாமாகவே களத்தில் இறங்கி செயற்பட்டு இருக்க வேண்டும்.

தற்கொலைக்கு காரணமான ஆசிரியரையும், தற்கொலைக்கு துண்டிய ஆசரியரையும், விசாரணை முடியும் வரை தற்காலிக பணி நீக்கம் செய்திருக்க வெண்டும்.

பதிலாக தம்மீது சுமத்தப்படும் குற்றச் சாட்டுகளை மறுதலிக்கும், அல்லது தம்மை பாதுகாக்க (defend பண்ண) முனைவதும், விமர்சனங்களை ஏற்க மறுப்பதும், இடது மைய அரசாங்கத்தின் பண்பாக இருக்க முடியாது.

கடுமையான அழுத்தங்களின் பின் விமர்சனங்களின் பின் சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. பிரதமர் ஹரினி பெற்றோரை அழைத்து பேசியிருக்கிறார்.

நடவடிக்கைகளை துரிதப்படுத்த காவற்துறைக்கு உத்தரவிட்டிருக்கிறார்.

ஆசிரியர் ஒருவர் கட்டாய விடுவிப்பில் அனுப்பப்பட்டு ள்ளார்.சம்பந்தப்பட்டவர் வெளிநாடு செல்ல தடைவிதிக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் இந்த நடவடிக்கைகள் முன்பே எடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

கடந்த காலங்களில் ஆட்சி புரிந்த ஏனைய அரசாங்கங்களை விடவும், ஆட்சியாளர்களை விடவும் நேர்மையாக ஆட்சியை தொடர்வதென்றால் கிளீன் சிறிலங்காவை உருவாக்க வேண்டும் என்றால் தவறுகளை தவறு என ஏற்றுக்கொள்ளும் பண்பு உருவாக வேண்டும்.

விமர்சனம் சுயவிமர்சனம் என்பவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்போது தான் NPP அரசாங்கம் பத்தோடு பதினொன்று அல்ல என்பதனை மக்கள் ஏற்றுக் கொள்வார்கள்.

ரணில் கூறிய L Board Board ("L plates" (red L on a white back ground) are mandatory for learner drivers to display on their vehicles.) அரசாங்கமாக தொடர்ந்தும் இருக்க முடியாது.

அவ்வாறே பயிற்சி முடிவடைந்து ஓட்டுனர் உரிமம் பெற்ற பின்னான 3 மாத கால ஓட்டுனர் அனுபவமும் கிடைத்து விட்டது. அதாவது " Board காலமும் நிறைவடைந்துள்ளது. (Green P "P plates" (green P on a white background) are optional and are used by newly qualified drivers to indicate that they are relatively inexperienced.) இனி வரும் காலம் அனைத்து விடயங்களிலும் பொறுப்புடன் செயற்பட வேண்டிய காலம்.

குறிப்பாக தேர்தல் காலத்தில் கொடுத்த வாக்குறுதிகளை படிப்படியாக காலம் தாழ்த்தாது நிறைவேற்ற வேண்டும்.

இந்தப்பதிவை இறுதி செய்யும் போது ஆணையிறவு உப்பு (Elephant pass Salt) என்ற பெயர் உறுதிசெய்யப் பட்டு உள்ளதுடன் சொன்னதை செய்தது போல் வாக்குறுதிகளை நிறைவேற்றுங்கள்.

1)பயங்கரவாத தடைச்சட்டம் உடனடியாக நீக்கப்பட வேண்டும்

2) புதிய அரசியல் அமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.

3) மாகாண சபைத் தேர்தல் நடத்தப் பட வேண்டும்.

4) தேசிய இனப்பிரச்சனையை தீர்ப்பதற்கான முயங்சிகளை ஆரம்பிக்க வேண்டும்.

5) வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம், அரசியல் கைதிகள் விடுவிப்பு, காணி விடுவிப்பு, காணிகளை கையகப்படுத்துதல் உள்ளிட்ட விடயங்களுக்கு தீர்வுகாணப்பட வேண்டும்.

6) இன, மத, மொழி வேறுபாடுகள் இன்றி, அரசியல் பாகுபாடுகள் இன்றி அனைத்து குற்றவாளிகளும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வெண்டும்.

7) சட்டத்தின் ஆட்சியை உருவாக்க வேண்டும்.

8 சட்டத் துறை, நிறுவாகத் துறை, நீதித்துறைகள் சுயாதீனமாக செயற்பட அனுமதிக்க வேண்டும்

9) லஞ்சம் ஊழலுக்கு எதிரான செயற்பாடுகள் துரிதப்படுத்தப்பட வேண்டும்.

10) நாடு பூராகவும் சம வளப் பங்கீட்டையும் அபிவிருத்தியையும் உறுதிப்படுத்த வேண்டும்.

இவற்றில் உடனடியாக கவனம் செலுத்தப்படல் வேண்டும். இல்லாவிடின் கோட்டாபயவை நீங்கள் வீட்டுக்கு அனுப்பினீர்கள்.

மாறாக உங்கள் பொறுப்பீனங்கள் தொடர்ந்தால் உங்களை நீங்களே வீட்டுக்கு அனுப்பி விடுவீர்கள்.

76 வருடங்களுக்கு பின் கிடைத்த அரிய சந்தர்ப்பம் இழக்கப்பட்டு நாடு மீண்டும் அதள பாதாளாத்தை நோக்கி தனது பயணத்தை ஆரம்பிக்கும்.

கிளீன் சிறீலங்காவா? அதளபாதாளமா? நாடு அநுரவிடமா? கொள்ளையர்களிடமா? என்பதனை நீங்களே தீர்மானியுங்கள்.

கோட்டாவை வீட்டுக்கு அனுப்பியது அறகலய! உங்களை நீங்களே வீட்டுக்கு அனுப்பி விடுவீர்களோ என பயமாய் இருக்கிறது!

நடராஜா குருபரன் முகநூலில் இருந்து

# தமிழினப் படுகொலை மீண்டும் இடம்பெறக் கூடாது! அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் டொன் டேவிஸ்

தமிழர் இனப்படுகொலையின் போது இடம் பெற்ற கொடூரங்கள் மீண்டும் இடம் பெறாததை உறுதி செய்ய வேண்டும் என அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் டொன் டேவிஸ் வேண்டு கோள் விடுத்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

இலங்கையில் தமிழர் இனப்படு கொலையின் 16 வருடத்தினை நான் நினைவு கூருவதற்காக நான் உரை யாற்றுகின்றேன். இன்றும் என்றும் நாங்கள் ஈழத்தமிழர்கள் சமூகத்தினர் ,உயிர்பிழைத்தவர்கள், அவர்களுடைய குடும்பத்தவர்கள் ,தொடரும் ஒடுக்கு முறைகளினை எதிர் கொண்டுள்ளவர் களுடன் ஐக்கியமாக இருக்கின்றோம்.

இலங்கை அரசாங்கத்திடமிருந்து அவர்கள் தங்கள் துயரங்களிற்கு நீதியை கோரும் வேளை நாங்கள் தமிழ் மக்கள் குறித்தும் அவர்கள் அனுபவித்த விடயங்கள் குறித்தும் கவனம் செலுத்தவேண்டும்.

அனைவரினது உரிமைகளையும் கௌரவத்தையும் மதிக்கும்



அமைதி தீர்விற்காக நாங்கள் பரப்புரை செய்ய வேண்டும்,

தமிழர் இனப்படுகொலையின் போது இடம் பெற்ற அட்டுழியங்கள் மீண்டும் இடம் பெறாததை உறுதி செய்ய வேண்டும்.மிக மோசமான துன்பத்தின் மத்தியில் தமிழ் சமூகம் வெளிப்படுத் திய மீள் எழுச்சிதன்மை நீதிக்கான அவர்களின் உறுதிப்பாடு அசைக்க முடியாத உணர்வு ஆகியவற்றிற்கான வெளிப்பாடாகும். நாங்கள் அனை வரும் ஈழத்தமிழர்களிற்கு ஆதரவாக யிருப்போம்.

### ஹேர்ப் கொனாவே கருத்து

தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அடிப்படையாக கொண்ட அரசியல் தீர்வினை ஆதரித்து அமெரிக்க காங் கிரஸ் உறுப்பினர் ஹேர்ப் கொனாவே கருத்து வெளியிட்டுள்ளார். சமூக ஊடக பதிவில் இதனை தெரிவித்துள்ள அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது

நியுஜேர்சியிலும் அமெரிக்கா முழுவதிலும் வாழும் தமிழ் அமெரிக்கர்களுடன் இணைந்து இலங்கையின் இனமோதலின் போது கொல்லப்பட்ட அல்லது பலவந்தமாக காணாமலாக்கப்பட்ட பல்லாயிரக் கணக்கான தமிழர்களின் நினைவுகளை நான் கௌரவிக்கின்றேன்.

தமிழர்களின் சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான நியாயமான நிரந்தர மான அரசியல் தீர்விற்காக நாங்கள் தொடர்ந்தும் பரப்புரை செய்கின்றோம் என்றார்.

# தமிழ் வழியில் பொறியியல் - மருத்துவம்

– கலாநிதி பா.இறையரசன் –

கலைகளைத் தமிழில் கற்றுக் கொடுக்கலாம், அறிவியலைத் தமிழில் கற்றுக் கொடுக்க முடியுமா? என்று பொது மக்களுக்கு மட்டுமல்லாமல், பல அறிஞர்களுக்கும் ஐயம் எழுகிறது. தமிழர்கள் ஓவியம், சிற்பம், கட்டடம், வானியல் முதலிய கலைகளில் வல்லவர்கள் என்பதைக் கோயில்களின் வழி அறியலாம்.

ஆயினும் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிகள் இல்லை என்று சிலர் கருதுகின்றனர்.

தமிழர்கள் பொறியியலில் பெற்றிருந்த வளர்ச்சியை கரும்பாலை, இரும்பாலை, கொல்லர் உலை ஆகியவற்றால் அறியலாம். கட்டடக் கலை வளர்ச்சியைக் கோயில்களும் அரண்மனைகளும் காட்டுகின்றன. நீர் மேலாண்மையை ஆறு, ஏரி உள்ளிட்டவையும் கல்லணையும் கூறுகின்றன.

தமது 'விஜயா' இதழில், பாரதியார் தமிழ்த் தொழிலாளிகள் விமானம் கட்டினார்கள் என்று மகிழ்ந்து எழுதினார்.

'திருச்சிராப்பள்ளியில் இயந்திரத் தொழில் வேலையையும் மின்சார சக்தியின் வேலையையும் படிப்பித்துக் கொடுக்கும் ஓர் புதிய வித்யாசாலை'யை ஆங்கிலேய அரசு தொடங்கியதை மகிழ்ந்து வரவேற்று 10.02.1910 இல் எழுதியுள்ளார்.

'ஓவச் செந்நூல்' என ஓவியக் கலை பற்றிய நூலைச் சிலப்பதிகாரம் கூறுகிறது. கட்டடக் கலைஞர்கள் 'நூலறி புலவர்' எனச் சங்க காலத்தில் கூறப்பட்டுள்ளனர்.

திருவள்ளுவர் உழவின் பெருமையைப் பாடியுள்ளார். கம்பர் எழுதிய 'ஏர் எழுபது' உழவின் பெருமையைக் கூறும். அந்நூலுக்கு எழுதப்பட்டுள்ள உரை 300 ஆண்டு பழமையானது. அது உழவியல் செய்திகளையும் மழைக்கேற்ற வானிலை பற்றியும் அக்கால வரலாற்றையும் கூறுகிறது.


மருத்துவக் கல்வியைத் தமிழில் நடத்த முடியுமா? மருத்துவம், புதிய கருவிகள் மேலை நாட்டில் வளர்ந்துள்ளன. இவற்றை எப்படித் தமிழில் கூற முடியும் என்று சிலர் மலைத்து நிற்கின்றனர்.

சங்கக் காலத்தில் (ஏறத்தாழ 2000 ஆண்டுகள் முன்) மருத்துவர்கள் இருந்தனர். ஊசி கொண்டு தைப்பதைக் கம்பர் பாடியுள்ளார். அறுவை மருத்துவம் இருந்தது. திருவள்ளுவர் 'மருந்து' என்றே ஓர் அதிகாரத்தைப் பாடியுள்ளார்.

திருமூலர் பத்தாம் நூற்றாண்டில் இருந்த சித்தர். மூச்சுப் பயிற்சி (பிரணாயாமம்), உடற்காப்பு பற்றி கூறுகிறார். மூச்சுப் பயிற்சி மருத்துவம் 'மோக்சா' மருத்துவம் என இன்றும் வழங்குகிறது. சீனர்களின் குத்தூசி (அக்குபஞ்சர்) மருத்துவம் தமிழக வர்ம மருத்துவம் அடிப்படை என்கின்றனர்.

குணபாடம், அகத்தியர் வைத்தியம், போகர் வைத்தியம், சரபேந்திரர் வைத்தியம், வாகடம் (மாடு, ஆடு, குதிரை முதலிய விலங்குகளுக்கான மருத்துவம்) முதலிய பல நூல்கள் சித்தர்களால் செய்யுள் வடிவில் எழுதப் பட்டவை.

அவை, ஏறத்தாழ 15 – 16 –ஆம் நூற்றாண்டில் தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் சித்த மருத்துவர்களிடையே வழங்கின. கண்நோய் பற்றிய விளக்கத்துக்கு வரைந்து கொடுத்துள்ளார் மன்னர் சரபோசி (அவர் ஓவியக்கலையிலும் வல்லவர்). பாவே மாணிக்க நாயக்கர் பொறியாளர் என்பதுடன் சிறந்த ஓவியரும் ஆவார். அவர் எழுதிய அறிவியல் கட்டுரைகள் கிடைக்கவில்லை. சாமுவேல் ஃபிஷ் கிரீன் 1860 – இல் தமிழில் மருத்துவ நூல்களை மொழி பெயர்த்துப் பாடமாக இலங்கையில் நடத்தியிருக்கிறார்.




'உடற்கூற்று வண்ணம்' என்பது நூறாண்டுகளுக்கு முன்பு அச்சில் வந்த பழமையான சித்த நூல். ஜப்பானில் நூறாண்டுகளுக்கு முன்பு தமிழில் அச்சிடப் பெற்ற உடல் கூற்றியல் (அனாடமி) பற்றிய நூல் வண்ணப் படங்களோடு வந்திருந்தது.

'பஞ்சபூதக்கலைகள் மெத்த வளருது மேற்கே, அக்கலைச்செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்' என்றார் பாரதி. பல அறிவியல் நூல்கள் தமிழ் அறிஞர்கள் கற்றார்கள், தமிழிலும் மொழி பெயர்த்தனர்.

மாடு, குதிரை முதலிய விலங்குகளுக்கான மருந்துகள் கூறும் வாகட நூல்கள் செய்யுளில் இருந்தன. கால்நடை மருத்துவம் பற்றிய முதல் மொழி பெயர்ப்பும் புத்தாக்கமும் கொண்ட பாடப்புத்தகம் வெ.ப.சு.முதலியாரின் இந்து தேசத்துக் கால்நடைக் காரரின் புத்தகம்' ஆகும்.

இலட்சுமணசாமி முதலியார் மகப்பேறு (பிரசவம்) பற்றி ஆங்கிலத்தில் நூல் 1938 – இல் எழுதினார். இந்நூலைப் பிற மாநிலத்தாரும் நாட்டாரும் பின் பற்றினர்.

தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் 1995 ஆண்டுகளில் மருத்துவப் படிப்புக்கான 14 நூல்கள் , பொறியியல் படிப்புக்கான 13 நூல்கள்ல தமிழில் அச்சிடப் பட்டன. பிற பல நூல்கள் கையெழுத்து வடிவில் அச்சாக்கம் பெறக் காத்திருக்கின்றன. இப்போது பாட நூல் நிறுவனமும் நூல்கள் அச்சிட்டுள்ளது.

குணபாடம் 1968 –இலும், பின் 1850 – ஆம் ஆண்டு காலத்தில் வெளிவந்த பிஷ்கிறீன் நூலை மொழி பெயர்த்து உடற்கூறு 1972 – ஆண்டு காலத்திலும் மருத்துவர் இரா.தியாகராசன் எழுதி வெளியிட்டுள்ளார்.

சித்த மருத்துவக் கல்லூரிகளில் 1990 ஆம் ஆண்டுக்குப் பின், ஆங்கிலம் நுழைந்தது. மெல்ல மெல்ல, உடலியல், உடற்கூறியல் ஆகிய பாடங்களை ஆங்கில நூல்களை வைத்துக் கற்பிக்கலாயினர் இன்றும் ஆங்கில நூல்களே பாட நூல்களாக உள்ளன.


கர்நாடகத்தில் ஆங்கில இலக்கியப் பட்டப் படிப்பில் விடை கன்னட மொழியில் எழுதலாம். தமிழ்நாட்டில் தமிழ் மருத்துவம் ஆகிய சித்த மருத்துவத்தை ஆங்கிலத்தில் படிப்பது சரியா? இன்றைய வளர்ச்சியாக உள்ள உடற்கூற்றியல், ஆய்வு முதலியவற்றை உடனுக்குடன் தமிழில் தரலாம் தர முடியும்!

அயல்நாட்டு மருத்துவமுறை ஆகிய அலோபதி நூல்களை உடனுக்குடன் நாம் மொழி பெயர்த்து பயன்படுத்த வேண்டும். சேலம் நகராட்சித் தலைவராக ராஜாஜி இருந்தபோது 'தமிழ் சாஸ்த்திர பரிபாஷை சங்கப் பத்திரிகை' என்ற ஒன்றை நடத்தி அறிவியல் தொழில் நுட்பக் கலைச் சொல் ஆக்கத்துக்கு உதவியுள்ளார்.

பெ.தூரனின் கலைக்களஞ்சியம் 10 தொகுதிகள் உள்ளன. கலைக்கதிர் இதழ், க்ரியா பதிப்பகம், மணவை முஸ்தபா , தனித்தமிழ் அறிஞர் அருளி ஆகியோர் கலைச் சொல்லாக்க நூல்களை வெளியிட்டுள்ளனர். நாற்பது ஆண்டுகளுக்கு முன்னரே (1985) கலைச் சொல்லாக்க நூல்களும் பாட நூல்களும் வெளியிடப்பட்டன. தமிழ்ப் பல்கலைக் கழகமும் பாட நூல் நிறுவனமும் பல நூல்கள் வெளியிட்டன.

இலங்கையில் மருத்துவப் பட்டத்துக்கு இரண்டாண்டு பாடங்கள் தமிழில் தான் நடத்தப்பட்டுள்ளன. இன்றைய வளர்ச்சியால் நூல்கள் பற்றாக்குறை இருப்பினும் ஆங்கில மூலநூல்களை வைத்துப் பாடம் நடத்தினால், உடனே துணை நூல்களைத் தர பதிப்பகங்களும், அறிவியல் அறிஞர்களும் தயாராக உள்ளனர். (தினமணி)

சிவமயம்



ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை

சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)

ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# அமெரிக்கத் தலையீட்டை இந்தியா விரும்பாதது ஏன்?

## டிரம்பிற்கு இடம் கொடுத்தால் அவர் காலூன்றி விடுவார்!

ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில் நடைபெற்ற கொடூரமான தீவிரவாதத் தாக்குதலுக்குப் பிறகு இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான பதற்றம் அதிகரித்து அதுவொரு இராணுவ மோதலாக மாறியது. இந்த மோதல் மே 10ஆம் தேதி மாலையில் போர் நிறுத்த அறிவிப்புடன் முடிவுக்கு வந்தது.

இருந்த போதிலும் இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான மோதலின் போதும்.அதை நிறுத்திக் கொள்ள ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னரும், பரவலாக விவாதிக்கப்பட்ட பல கேள்விகள் எழுந்துள்ளன.

முக்கியமாக விவாதிக்கப்பட்ட விஷயங்களில் அமெரிக்க அதிபர் டிரம்ப், என்பது குறிப்பிடத்தக்கது. அவர்தான் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான சண்டை நிறுத்தத்தை முதலில் அறிவித்தார். அதே போல இரு நாடுகளிடமும் அணு ஆயுதங்கள் இருப்பது குறித்தும் விவாதங்கள் நடைபெற்று வருகின்றன.

பஹல்காம் தாக்குதலுக்குப் பிறகு மக்களவை எதிர்க்கட்சித் தலைவரும் காங்கிரஸ் எம்பியுமான ராகுல் காந்தி பேசியபோது, ஜம்மு-காஷ்மீரில் நிலைமை சாதாரணமாக இருப்பதாக மத்திய அரசு சொல்லிக் கொண்டிருப்பதற்குப் மாறாக இப்போது உறுதியான நடவடிக்கைகளை எடுப்பது அவசியம்' என்று கூறியிருந்தார்.

சர்வதேச விவகாரங்களில் நிபுணரும் மோதல் மேலாண்மை நிறுவனத்தின் இயக்குநருமான அஜய் சாஹ்னி பாதுகாப்பு குறித்த கேள்விக்கு பதிலளிக்கையில், 'காஷ்மீரின் உள்நாட்டு நிலைமை ஏற்கெனவே கணிசமாக மேம்பட்டுள்ளது. இந்த ஒரு சம்பவத்தை வைத்து காஷ்மீரின் பாதுகாப்பை மதிப்பிட முடியாது.

காஷ்மீரில் 16 ஆண்டுகளாக மோதல் தீவிரமாக இருப்பதை மக்கள் மறந்துவிட்டார்கள். 2001 ஆம் ஆண்டில் மட்டும் 4011 பேர் உயிரிழந்த நிலையில், கடந்த ஆண்டு 127 பேர் உயிரிழந்தனர். கடந்த ஆண்டின் மே மாதத்தில் 50 பேர் உயிரிழந்தனர். இவர்களில் பாதுகாப்புப் பணியாளர்கள், பயங்கரவாதிகள் மற்றும் பொதுமக்கள் அடங்குவர்.'

எனவே காஷ்மீரில் நிலைமை முன்பைவிட மேம்பட்டுள்ளது. அங்கு இயல்பு நிலை நிலவுவதாகவும் தீவிரவாதம் பூஜ்ஜியம் என்ற நிலைக்கு வந்துவிட்டதாகவும் அரசு கூறுவது தான் நமது மதிப்பீட்டில் உள்ள தவறு. இது பாதுகாப்பு மதிப்பீடு அல்ல. காஷ்மீரில் அச்சுறுத்தல் இன்றும் உள்ளது. நீண்ட காலத்திற்கு அப்படியே இருக்கும். ஆனால் முன்பைவிட குறைந்துவிட்டது. காஷ்மீருடன் தனக்கு தொடர்பு உள்ளது என்ற எண்ணத்தை பாகிஸ்தான் கைவிடும் வரை அச்சுறுத்தல் இருக்கும்.'

### பாகிஸ்தானின் நீண்டகால உத்தி

சிம்லா ஒப்பந்தத்திற்குப் பிறகு, எந்தவொரு சர்ச்சையும் இருதரப்பு ரீதியாக தீர்க்கப்படும் என்று நாம் கூறியிருந்தோம். ஆனால் அமெரிக்கா இந்த மோதலில் தலையிடுகிறது. அது நீண்ட காலமாக இந்த முயற்சியில் ஈடுபட்டு வருகிறது. இவை வெளியில் பேசக்கூடிய விஷயங்கள் அல்ல' என்று அவர் கூறுகிறார்.

பாகிஸ்தானுக்கு வெளிப்படையான பதில் தேவையில்லை. அவர்களுக்கு தீங்கு விளைவிக்க இந்தியாவிடம் நூற்றுக்கணக்கான வழிகள் உள்ளன. இரகசியமாக பதிலளிப்பது என்றால், அது பழிக்குப்பழி என்பது கிடையாது. இது பலவிதமான செயல்பாடுகளைக் கொண்டுள்ளது. பொருளாதாரம், சைபர், தகவல் போர் போன்றவை அடங்கும். எனவே பாகிஸ்தானை எதிர்கொள்ள ஒரு நீண்டகால உத்தி இருக்க வேண்டும்.'

உண்மையில் பஹல்காமில் நடைபெற்றத் தாக்குதலுக்குப் பிறகு, பாகிஸ்தானுக்கு எதிராக இந்தியா பல நடவடிக்கைகளை எடுத்தது. இதற்கு பதிலளிக்கும் விதமாக, சிம்லா ஒப்பந்தம் உட்பட இந்தியாவுடனான இரு தரப்பு ஒப்பந்தங்கள் அனைத்தையும், வர்த்தகத்தையும் நிறுத்தி வைப்பதாக பாகிஸ்தான் அறிவித்தது.

1971-ஆம் ஆண்டு இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான போருக்குப் பிறகு, பாகிஸ்தானின் ஒருபகுதி சுதந்திர நாடாக மாறி வங்கதேசமாக உருவெடுத்தது. இதன் பிறகு சிம்லா ஒப்பந்தத்தின் கீழ், இரு நாடுகளும் இருதரப்பு பேச்சுவார்த்தைகள் மூலம் பரஸ்பர பிரச்சினைகளைத் தீர்க்க ஒப்புக்கொண்டன.

### தீவிரமடையும் காஷ்மீர் அரசியல்

நீண்ட காலமாக யாரும் நமக்கு உதவவில்லை என்ற போது நாம் ஏன் ஒருவரின் கதவைத் தட்டிக் கொண்டே இருக்கிறோம். மறுபுறம், இங்கே நாம் பாதிக்கப்பட்டவர்கள் மட்டுமல்ல, வெற்றி பெற்றவர்களும் தான். தீவிரவாதத்தை முடிவுக்குக் கொண்டு வந்துள்ளோம். ஜம்மு-காஷ்மீரில் ஒரே வருடத்தில் 4000 பேர் இறந்தனர் என்ற நிலை மாறி, இப்போது 127 பேர் மட்டுமே இறந்துள்ளனர் என்ற அளவுக்கு நிலைமை மாறியிருக்கிறது. தீவிரவாதம் தொடர்கிறது. ஆனால் முடிவை நோக்கி சென்றுக் கொண்டிருக்கிறது. இது, நமது சொந்த திறன்கள் மற்றும் சொந்த உழைப்பால் முடிவுக்கு வந்துள்ளது' என்று அஜய் சாஹ்னி பிபிசியிடம் கூறினார். பாகிஸ்தானுடனான சண்டை நிறுத்தத்திற்குப் பிறகும், இந்த முழு சம்பவத்திலும் இந்தியா டிரம்பின் பெயரைப் பயன்படுத்தவில்லை. அதற்கு காரணம் ஏன் என்ற கேள்விக்கு அஜய் சாஹ்னி பதிலளிக்கிறார். 'டிரம்பை புறக்கணிக்க வேண்டும். டொனால்ட் டிரம்பை எதிர்த்து நிற்கவில்லை என்றால், அவர் இடத்தைப் பிடிப்பார். நீங்கள் அவருக்கு இடம் கொடுத்தால், அவர் அழுத்தமாக காலூன்றி விடுவார்' என்று அவர் கூறுகிறார்.

டொனால்ட் டிரம்ப் சனிக்கிழமை மாலை தனது சமூக ஊடக தளமான ட்ரூத் சோஷியலில் வெளியிட்ட பதிவில் இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் ஒரு 'சண்டை நிறுத்தத்தை' அறிவித்தார். பேச்சுவார்த்தைகளில் அமெரிக்கா மத்தியஸ்தம் செய்ததாக அவர் கூறியிருந்தார்.

இரவு முழுவதும் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில்' அமெரிக்கா மத்தியஸ்தம் செய்ததாகவும் அவர் தனது சமூக ஊடகப் பதிவில் குறிப்பிட்டிருந்தார்.



அதன்பிறகு சிறிது நேரத்திலேயே, பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் இஷாக் டார் சமூக ஊடக தளமான எக்ஸ்-இல் 'சண்டை நிறுத்தத்தை' உறுதிப்படுத்தினார். அத்துடன், அமெரிக்கா மட்டுமல்ல, சௌதி அரேபியா, பிரிட்டன் உட்பட 30க்கும் மேற்பட்ட நாடுகள் சமாதான முயற்சிகளில் ஈடுபட்டதாகவும் அவர் கூறினார்.

ஆனால் இந்தியா அமெரிக்காவின் மத்தியஸ்தத்தைப் பற்றி எதுவுமே சொல்லவில்லை. டிரம்பின் அறிக்கையும், அதையடுத்து பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சரின் உறுதிப்படுத்தலும் நடைபெற்ற பின்னர், செய்தியாளர்கள் கூட்டத்தில் பேசிய இந்திய வெளியுறவு செயலாளர் விக்ரம் மிஸ்ரி, இராணுவ மோதலைத் தடுக்க இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையே ஒப்பந்தம் எட்டப்பட்டதாகத் தெரிவித்தார்.

### 72 மணி நேரத்தில் மாறிய நிலைப்பாடு

இந்திய இராணுவ நடவடிக்கைகளுக்கான இயக்குநர் ஜெனரலை (டிஜிஎம்ஓ) தொலைபேசியில் தொடர்பு கொண்டு பாகிஸ்தானின் டிஜிஎம்ஓ பேசியதாக கூறிய விக்ரம் மிஸ்ரி, அதன்பிறகு இரு நாடுகளும் ஒருமித்த கருத்தை எட்டியதாக குறிப்பிட்டார். மேலும், பிரதமர் நரேந்திர மோடி நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையிலும் இதையே கூறினார். ஆனால், அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் மே 11 அன்று ட்ரூத் சோஷியலில், 'ஆயிரம் ஆண்டுகளாக சர்ச்சைக்குரியதாகவே தொடர்ந்து வரும் காஷ்மீர் பிரச்னையைத் தீர்க்க இந்த இரு நாடுகளுடன் இணைந்து பணியாற்ற காத்திருக்கிறேன். இந்த பிரச்னை தீர்ந்தால் பிராந்தியத்தில் அமைதியும் செழிப்பும் நிலவும். இதனால் அமெரிக்கா மற்றும் உலகின் பிற நாடுகளுடன் வர்த்தகம் அதிகரிக்கும்!' எனப் பதிவிட்டார்

அமெரிக்க அதிபர் டிரம்ப் தனது அறிக்கையில் காஷ்மீர் பிரச்னையைப் பற்றி குறிப்பிட்டுள்ளார். ஆனால் காஷ்மீர் பிரச்சினையில் மூன்றாவது நாட்டின் மத்தியஸ்தத்தை ஏற்க மாட்டோம் என்பதில் இந்தியா உறுதியாக இருக்கிறது.

### நடக்கப் போவது என்ன?


இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் இனி எந்தவிதமான மாற்றம் வரும் என்ற கேள்விக்கு பதிலளிக்கும் அஜய் சாஹ்னி, 'என்னைப் பொறுத்தவரை எதுவும் மாறப்போவதில்லை. தகவல் போர் என்பது முக்கியமான போராயுதம். ஆனால் இங்கே நாம் அவர்களுக்கு எதிராக தகவல் போரை பயன்படுத்தவில்லை. அவர்களும் அதை நமக்கு எதிராகப் பயன்படுத்தவில்லை. இருதரப்பின் கவனமும் மக்களின் மீதே இருக்கிறது' என்று தெரிவித்தார். அணு ஆயுதப் போர் பற்றி பேசும் அஜய் சாஹ்னி, 'அணு ஆயுதப் போர் அவ்வளவு சுலபமாக தொடங்கி விடாது. அணு ஆயுதப் போர் ஏற்படும் என்ற அச்சம் சிறிதளவு இருந்திருந்தால் கூட டெல்லியில் உள்ள பிற நாட்டு தூதரகங்கள் காலி செய்யப்பட்டிருக்கும். ஆபரேஷன் பராக்கிரம் காலத்தை நினைவு கூரலாம். அப்போது, ஒரு குண்டு கூட சுடப்படாத நிலையில் தூதரகங்கள் காலி செய்யப்பட்டன' என வரலாற்றை நினைவுகூர்கிறார்.

அணு ஆயுதம் என்ற வார்த்தையை பாகிஸ்தான் மட்டுமல்ல, டிரம்பும் பயன்படுத்தியுள்ளார். அணு ஆயுதம் கொண்டு தாக்குவது என்பது உறுதி செய்யப்பட்ட அழிவைக் குறிக்கிறது. அது பயன்படுத்த முடியாத ஒரு வழிமுறை அல்லது ஆயுதம் என்று சொல்லலாம். ஏனென்றால் அணு ஆயுதத்தைப் பயன்படுத்தினால், அது மோதிக் கொள்ளும் நாடுகளை மட்டுமல்ல, அவற்றைச் சுற்றியுள்ள பிற நாடுகளையும் அழித்து விடும். ஒரு வேளை உலகிலும் உள்ள அனைத்தையும் அழித்து விடலாம்' என்று அவர் கூறினார்.


இதற்கிடையில் கடந்த 12 மே 2025 திங்கட்கிழமை இரவு 8.00 மணிக்கு நாட்டு மக்களுக்கு உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி, 'எந்தவொரு அணு ஆயுத அச்சுறுத்தலையும் இந்தியா பொறுத்துக்கொள்ளாது' என்று உறுதிபடக் கூறினார்.

**நன்றி:- பிபிசி**


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! முடங்கிக் கிடந்த காரியங்கள் அனைத்தும் வேகம் பிடிக்கும். நெருக்கடியான நேரத்தில் உறவினர்கள், நண்பர்கள் கை கொடுப்பார்கள். மனதில் இருந்து வந்த சஞ்சல நிலை மாறும். தருமசிந்தனை உண்டாகும். தொழில் வியாபாரம் சீராக நடக்கும். பழைய பாக்கிகள் வசூல் செய்வதில் வேகம் இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கலாம்.





ரிஷபராசி அன்பர்களே! எந்த ஒரு காரியத்திலும் சரியான முடிவுக்கு வர முடியாமல் இருந்த தடுமாற்றம் நீங்கும். சாமர்த்தியமாக எதையும் சமாளிக்கும் துணிச்சல் வரும். பணவரத்து திருப்தி தரும். எதிர்ப்புகள் குறையும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் குறையும். எந்த வேலையை முதலில் கவனிப்பது என்று குழப்பம் வரும். மேலிடத்துடன் இருந்து வந்த கருத்து மோதல்கள் நீங்கும்.





மிதுனராசி அன்பர்களே! மறைமுக எதிர்ப்புகள் நீங்கும். எந்த ஒரு காரியமும் சாதகமாக முடியும். விருப்பமானவர்களுடன் சந்திப்பு ஏற்படும். வாக்கு வன்மையால் நன்மையை தரும். நோய் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். தொழில் வியாபாரம் திட்டமிட்டபடி சிறப்பாக நடக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு வேலைப் பளு, வீண் அலைச்சல் குறையும். அதிகாரம் அந்தஸ்து கிடைக்கும்.





கடகராசி அன்பர்களே! வீண் வாக்குவாதம் ஏற்படும். மற்றவர்களிடம் அனுசரித்து செல்வது நன்மை தரும். பயணம் மூலம் சாதகமான பலன் கிடைக்கும். கடித போக்குவரத்து நன்மை தரும். பழைய வீட்டை புதுப்பிப்பதற்கு வாய்ப்புகள் ஏற்படும். தொழில் வியாபாரம் தொடர்பான நெருக்கடிகளை சந்திக்க வேண்டி வரும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் சுமையாக வரும். சாமர்த்தியமாக பழகி அனுகூலம் அடைவீர்கள்.




சிம்மராசி அன்பர்களே! தடைப்பட்டிருந்த பணவரத்து வந்து சேரும். உடல் ஆரோக்கியம் சீராகும். அடுத்தவர் விவகாரங்களில் தலையிடாமல் ஒதுங்கி செல்வது நல்லது. தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் கூடுதல் செலவை சந்திக்க நேரிடும். தேவையான உதவி கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு கூடுதல் பணி காரணமாக உடல் சோர்வு உண்டாகலாம்.




கன்னிராசி அன்பர்களே! பொறுப்புகள் அதிகரிக்கும். வீட்டை விட்டு வெளியே தங்க நேரிடும். தேவையில்லாத வீண் செலவுகள் உண்டாகும். பணவரத்து அதிகரிக்கும். தொழில் வியாபாரம் தொடர்பாக அலைய வேண்டி இருந்தாலும் முடிவில் லாபம் கிடைக்கும். புதிய ஆர்டர்கள் வரும். உத்யோகத்தில் இருப்பவர்கள் உழைப்புக்கு ஏற்ற பலனை அடைவார்கள். புதிய வேலை தேடுபவர்களுக்கு நல்ல வேலை கிடைக்கும்.





துலாம் ராசி அன்பர்களே! தைரியமாக எந்த காரியத்தையும் செய்து முடிப்பீர்கள். சகோதரர்கள் மூலம் நன்மை உண்டாகும். பணவரத்து எதிர்பார்த்தபடி இருக்கும். வாகனங்களை ஓட்டிசெல்லும் போது கவனம் தேவை. வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். எந்த காரியத்திலும் விட்டு கொடுத்துச் செல்வது நல்லது. தொழில், வியாபாரம் தொடர்பான விவகாரங்களில் தாமதம் ஏற்படலாம். உத்யோகத்தில் இருப்பவர்கள் இடமாற்றம், பதவி இறக்கம் ஆகியவற்றை சந்திக்க வேண்டி இருக்கும்.





விருச்சிகராசி அன்பர்களே! ஆக்கபூர்வமான யோசனைகள் தோன்றும். மற்றவர்களுடன் கருத்து வேற்றுமை ஏற்படாமல் கவனமாக இருப்பது நல்லது. தொழில் வியாபாரம் நிதானமாக நடக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் வேலையில் கவனமாக இருப்பது நல்லது. வேறு வேலைக்கு முயற்சி செய்பவர்கள் சிறிது காலம் தள்ளிப் போடுவது சிறந்தது. குடும்பத்தில் ஏதாவது பிரச்சனை தலைதூக்கலாம். எல்லோரையும் அனுசரித்து செல்வது நன்மை தரும்.








தனுசுராசி அன்பர்களே! எந்த காரியத்தையும் செய்து முடிப்பதில் தாமதம் ஏற்படும். பகைவர்களால் ஏற்படும் சிறு தொல்லைகளை சமாளிக்க வேண்டி இருக்கும். புதிய நண்பர்களுடன் பழகும் போது கவனம் தேவை. தொழில் வியாபாரம் நிதானமாக நடக்கும். கடன் விவகாரங்கள் கட்டுக்குள் இருக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலை சந்திக்க வேண்டி இருக்கும். அலுவலக பணிகள் மூலம் பதற்றம் உண்டாகும்.




மகரராசி அன்பர்களே! வீண் செலவுகள் ஏற்படும்.எடுத்த காரியத்தை செய்து முடிப்பதில் தாமதம் ஏற்படும். கொடுத்த வாக்கை காப்பாற்ற பாடுபட வேண்டி இருக்கும். மற்றவர்களின் பிரச்சனைகளுக்கு வலிய சென்று உதவிகள் செய்வதை தவிர்ப்பது நல்லது. தொழில் வியாபாரம் முன்னேற்றம் காண மிகவும் கடுமையாக உழைக்க வேண்டி இருக்கும். பார்ட்னர்களுடன் அனுசரித்து செல்வது நல்லது.




கும்பராசி அன்பர்களே! அதிகம் உழைக்க வேண்டியது அவசியம். தேவையற்ற பயணங்கள் அதன் மூலம் அலைச்சல், உடல் நல சோர்வு ஏற்படலாம். அடுத்தவரை நம்பி எதையும் ஒப்படைப்பதை தவிர்ப்பது நல்லது. சுபசெலவுகள் ஏற்படும். தொழில் வியாபாரம் திட்டமிட்டபடி நடக்கும். பொருட்களை வாடிக்கையாளர்களுக்கு அனுப்புவதில் தாமதம் ஏற்படலாம். போட்டிகள் தலைதூக்கும்.




மீனராசி அன்பர்களே! நிலுவையில் இருந்த பணம் வந்து சேரும். நீண்ட நாட்களாக திட்டமிட்ட வாகனம் சொத்து மற்றும் வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். பயணங்கள் சாதகமான பலன் தருவதாக இருக்கும். உடல் ஆரோக்யம் மேம்படும். தெய்வ பக்தி அதிகரிக்கும். தொழில் வியாபாரம் சிறப்பாக நடக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மன மகிழ்ச்சியடைவார்கள்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# வடக்கு கிழக்கல் உள்ளூராட்சித் தேர்தல்

(14ம் பக்கத் தொடர்ச்சி) கூட இல்லாத நிலையில் அதனை வேண்டாம் என்பது எந்தவகை அறிவைச் சாரும்? எனவே இந்த முரட்டு நிலைப்பாடுகளை விடுத்து தமிழ் மக்களின் இன்றைய நிலை ஆட்சியாளரின் நிகழ்ச்சி நிரல் எமது பலம் சர்வதேச சக்திகளின் நிலைப்பாடும் தீர்வு நோக்கி முன்னேறவுள்ள சாத்தியப்பாடுகள் போன்றவற்றை மனம்விட்டு வெளிப்படையாகப் பேசி கூட்டு முடிவை எடுக்க தமிழரசும் காங்கிரசும் தயாராக வேண்டும். எனவே புதிய கூட்டிணைவு என்பது வெறுமனே சபைகளை கைப்பற்றுவதோடு நிற்க முடியாது. மாறாக தீர்வு நோக்கி ஒன்றுபட்டு செயற்படுவதற்கான பேச்சுவார்த்தைகளும் இடம்பெற வேண்டும். தொடர வேண்டும்.

இத்தகைய அர்த்தபுஷ்டியான ஆரோக்கியமான ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தையின் அடிப்படையில் ஜனநாயகபூர்வமானதும் அரசியல் நாகரீகத்தின் பாற்பட்டதுமான எழுத்துபூர்வமான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஒன்றுபட்டு சபைகளைக் கையேற்பதும் ஒன்றுபட்டு இனமோதல் தீர்வு நோக்கிய திட்டங்களைச் செயற்படுத்துவதும் அமைய வேண்டும். இந்த அணுகுமுறை விரைவாகவே வடக்கு கிழக்கில் இருந்து சிங்கள கட்சிகளை அகற்ற ஏதுவாகும் என்பதுடன் தமிழ்த் தேசியத்தின்பால் அனைத்துத் தமிழ் மக்களையும் அணி திரட்டும். தீர்வு நோக்கிய பயணம் ஆரோக்கியமாக நம்பிக்கையூட்டுவதாகவும் அமையும்.

# தமிழ்கட்சிகளுக்குக் கிடைத்த வாக்குகள்...

(உணர்வெழுச்சியுடன் முன்னெடுப்பதற்கு நாட்டம் காட்டக்கூடிய சாத்தியம் இருக்கிறது. தங்களுக்கு தற்போது கிடைத்த வெற்றியை (தாங்கள் பங்கேற்காத கடந்தகாலப் போராட்டங்களை வெறுமனே நினைவு கூர்ந்து கொண்டு உணர்ச்சிமயமான கற்பிதங்களுடன் கூடிய கற்பனாவாத சுலோகங்களை எழுப்பும் (தோல்விகண்ட) அரசியல்பாதைக்கு தமிழ் மக்களிடமிருந்து கிடைத்த அங்கீகாரமாக தமிழ்க்கட்சிகள் நம்பினால் மீண்டும் தவறிழைப்பதாகவே அமையும்.

# இஸ்ரேல் - பாலஸ்தீன இரு நாடுகளை ஏற்றுக் கொள்ளும் இலங்கை அரசு!



இஸ்ரேல் வசம் உள்ள பாலஸ்தீன பகுதிகளுக்கான வேலைவாய்ப்புக்காக இலங்கை புலம்பெயர்ந்த தொழிலாளர்களை அனுப்பாது என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார். இது தொடர்பில் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் ரத்நாயக்க,

இஸ்ரேலுடன் இராஜதந்திர மற்றும் பொருளாதார உறவுகளைப் பேணும் பல நாடுகளைப் போலவே, இலங்கையும் நாட்டின் பொருளாதாரத்தின் நலனுக்காக புலம்பெயர்ந்த தொழிலாளர்களை அனுப்புவதை தொடர வேண்டும்.

இஸ்ரேலுடனான உறவுகளை இலங்கை திடீரென முறித்துக் கொண்டால், பொருளாதாரம் வீழ்ச்சியடையும். இதன் விளைவாக இஸ்ரேலில் தற்போது பணிபுரியும் பல இலங்கையர்கள் வேலை இழக்க நேரிடும். இதை நாம் செய்ய முடியாது.

பாலஸ்தீனத்துடன் நிற்கும் ஆனால் இராஜதந்திர மற்றும் பொருளாதார நோக்கங்களுக்காக இஸ்ரேலுடன் உறவுகளைத் தொடரும் சவுதி அரேபியா, சீனா மற்றும் ரஷ்யா உள்ளிட்ட பல நாடுகளைப் போலவே இலங்கையும் செயல்படும். நாங்கள் ஒரு சுதந்திர பாலஸ்தீன அரசு மற்றும் ஒரு சுதந்திர இஸ்ரேல் அரசு ஆகியவற்றில் நம்பிக்கை கொண்டுள்ளோம். இலங்கை அவற்றை இரண்டு தனித்தனி அரசாங்கங்களாகக் கருதுகிறது. எனவே இலங்கை இஸ்ரேலுடன் அரசியல் மற்றும் பொருளாதார உறவுகளைத் தொடர வேண்டும் என்றார்.

பாலஸ்தீனம் மீதான தாக்குதல்கள் காரணமாக, இலங்கை இஸ்ரேலுக்கு வேலை வாய்ப்புக்காக புலம்பெயர்ந்த தொழிலாளர்களை அனுப்புவதை நிறுத்த வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரவுப் ஹக்கீம் அண்மையில் கூறியது குறித்து செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் விதமாக அமைச்சர் இந்தக் கருத்துக்களை தெரிவித்தார்.

# ஆனையிறவு உப்பளத்தில் போராட்டம் நடத்த தடை!

கிளிநொச்சி ஆனையிறவு உப்பளத்தில் உற்பத்தி செய்யப்படும் உப்பினை வெளியிடங்களுக்கு கொண்டு சென்று பொதி செய்யும் செயற்பாட்டுக்கு எதிர்ப்பு தெரிவித்து நடத்தப்பட்ட போராட்டத்துக்கு நீதிமன்ற தடை உத்தரவு பெறப்பட்டுள்ளது. இந்நிலையில், போராட்டம் நடத்தப்படும் பகுதியில் 16 மே 2025 வெள்ளிக்கிழமை காலை பொலிஸார் குவிக்கப்பட்டனர்.

ஆனையிறவு உப்பளத்தில் கடந்த ஒன்பது வருடங்களுக்கு மேலாக பணியாற்றும் தற்காலிக பருவ கால ஊழியர்கள் தங்களுடைய பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்தும், அங்கு உற்பத்தியாகும் உப்பினை ஆனையிறவில் பொதிசெய்து விநியோகிக்குமாறு கோரியும் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை கடந்த 14 மே 2025 புதன்கிழமை முதல்ஆனையிறவு உப்பளத்துக்கு முன்பாக நடத்தியிருந்தனர்.

2016ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஆனையிறவு உப்பு உற்பத்தி மையத்தில் தற்காலிகமாக இணைத்துக் கொள்ளப்பட்ட பருவ கால ஊழியர்கள் தங்களுக்கான நிரந்தர நியமனம் வழங்கப்படாமை, உரிய காலத்தில் உரிய வேதனம் வழங்கப்படாமை என்பவற்றை சுட்டிக்காட்டியும் ஆனையிறவில் உற்பத்தி செய்யப்படுகின்ற உப்பினை வெளியிடங்களுக்கு கொண்டுசென்று பதனிட வேண்டாம் என்றும் வேறு சில கோரிக்கைகளை முன்வைத்தும் இந்த போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். இப்போராட்டத்தின் விளைவாக, கடந்த இரண்டு நாட்களாக உப்பு கொண்டு செல்லப்படும் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டிருந்தன.

இந்நிலையில், போராட்டத்துக்கு நீதிமன்ற தடை உத்தரவு பெறப்பட்டதுடன், உப்பு ஏற்றுவதற்கான வாகனங்கள் குறித்த பகுதிக்கு சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases



Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com







# கனடா வெளிவிவகார அமைச்சரானார் அனிதா ஆனந்த்! பகவத்கீதையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்!



கனடா நாடாளுமன்ற தேர்தல் சமீபத்தில் நடந்து முடிந்தது. இதில் முன்னாள் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவின் கட்சி மீண்டும் வெற்றி பெற்றது. புதிய பிரதமராக மார்க் கார்னி வெற்றி பெற்றார். அவரது அமைச்சரவையில் வெளியுறவுத்துறை அமைச்சராக பதவியேற்று கொண்ட தமிழ் வம்சாவளி பெண்ணான அனிதா ஆனந்த் பகவத் கீதையை வைத்து பதவி பிரமாணம் எடுத்து கொண்டார்.

இந்த அனிதா ஆனந்த் யார்? பின்னணி என்ன? . கனடா பிரதமராக ஜஸ்டின் ட்ரூடோ இருந்தார். அரசியல் நெருக்கடியால் அவர் தனது பிரதமர் பதவியை ராஜினாமா செய்தார். இதையடுத்து இடைக்கால பிரதமராக மார்க் கார்னி செயல்பட்டார். அதன் பிறகு அவரே லிபரல் கட்சி சார்பில் பிரதமர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டார். இதையடுத்து கடந்த மாதம் இறுதியில் கனடாவில் நாடாளுமன்ற தேர்தல் நடந்தது. இதில் லிபரல் கட்சி அமோக வெற்றி பெற்றது. இதையடுத்து மீண்டும் மார்க் கார்னி பிரதமராக பொறுப்பேற்றார்.

இந்நிலையில் தான் புதிய அமைச்சரவை அமைக்கப்பட்டது. மொத்தம் 28 அமைச்சர்கள்இ 10 மத்திய இணை அமைச்சர்கள் என்று மொத்தம் 38 பேர் இடம் பெற்றனர். இதில் 24 பேர் புது முகங்களாகும். இந்த அமைச்சரவையில் தமிழக வம்சாவளியை சேர்ந்த ஆனந்த் இடம் பெற்றுள்ளார். அவருக்கு வெளியுறவுத் துறை ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதையடுத்து அனிதா ஆனந்த் பகவத் கீதையை வைத்து அமைச்சராக பதவி பிரமாணம் செய்து கொண்டார்.

பகவத் கீதையை வைத்து அனிதா ஆனந்த் பதவியேற்ற வீடியோவை அவர் தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். அதில் கனடாவின் புதிய வெளிவிவகார அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளமை குறித்து பெருமிதம் கொள்கிள்றேன். பாதுகாப்பான நியாயமான உலகத்தை கட்டியெழுப்பவும் கனேடிய மக்களிற்கு வழங்கவும் பிரதமர் மார்க் கார்னி மற்றும் எங்கள் குழுவினருடன் இணைந்து பணியாற்ற எதிர்பார்த்துள்ளேன் என அவர் சமூக ஊடக பதிவில் தெரிவித்துள்ளார்.

தற்போது கனடா வெளியுறவுத்துறை அமைச்சராக பொறுப்பேற்றுள்ள அனிதா ஆனந்த் பெற்றோர் இந்தியாவை பூர்வீகமாக கொண்டவர்கள். தந்தை தமிழகத்தை சேர்ந்தவர். மருத்துவர்.. தாய் பெயர் சரோஜ். இவர் பஞ்சாப்பை சேர்ந்தவர். இவரும் மருத்துவர் டாக்டர்

அனிதா ஆனந்த் கனடாவிலேயே பிறந்து வளர்ந்தவர். இப்போது 58 வயது ஆகிறது. 4 பட்டப்படிப்புகளை முடித்துள்ளார். குயின்ஸ் பல்கலைக் கழகத்தில் இளநிலை பிரிவில் Arts in Political Studies என்பதை படித்து முடித்தார். அதில் தங்கப்பதக்கம் வாங்கினார். அதன்பிறகு ஒக்ஸ்போர்ட் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் இளநிலை பிரிவில் Jurisprudence படிப்பையும் தல்ஹசி பல்கலைக்கழகத்தில் சட்டப் படிப்பையும் டொரண்டோ பல்கலைகழகத்தில் சட்ட மேற்படிப்பையும் முடித்தார்.

அனிதா ஆனந்த் அடிப்படையில் வழக்கறிஞர் ஆவார். இவர் கடந்த 2015ம் ஆண்டில் பொது வாழ்க்கைக்குள் நுழைந்தார். அவர் ஒன்டாரியோ அரசின் நிபுணர் குழுவில் இடம் பிடித்தார். அதன் பிறகு கடந்த 2019ம் ஆண்டில் ஒக்வில்லி நாடாளுமன்ற தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். அதன் பிறகு கொரோனா பரவல் சமயத்தில் பொதுசேவை மற்றும் கொள்முதல் பிரிவின் அமைச்சராக செயல்பட்டார். அனிதா ஆனந்துக்கு திருமணமாகி விட்டது. கணவர் பெயர் ஜான் நோல்டன். இவரும் கனடாவில் வழக்கறிஞராகவும் வருகிறார்.

இதேவேளை கனடாவின் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராக இலங்கைத் தமிழரான ஹரி ஆனந்தசங்கரி பதவியேற்றுள்ளார்.

பொதுப் பாதுகாப்பு அமைச்சராக, கெரி ஆனந்தசங்கரி, மக்கள் பாதுகாப்பு, தேசிய பாதுகாப்பு, அவசர நிலை மேலாண்மை, குடியுரிமை மற்றும் எல்லை பாதுகாப்பு உள்ளிட்ட பல முக்கியப் பொறுப்புகளுக்கு தலைமை தாங்குவார்.

தேர்தலுக்கு இரண்டு வாரங்களுக்குப் பிறகு, மே 13, 2025 அன்று அறிவிக்கப்பட்ட குறிப்பிடத்தக்க அமைச்சரவை மறுசீரமைப்பின் ஒரு பகுதியாக ஆனந்தசங்கரியின் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் கெரி ஆனந்தசங்கரி, கனடாவின் நீதி அமைச்சராக செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

